உ
வேலும் மயிலும் துணை



யாழ்ப்பாணம் - பண்ணாகம் - சுழிபுரம் வாசர்

# அமரர்
# திரு இராமலிங்கம் தம்பையா
# அவர்களின்
# "ஞாபக மலர்"




22-03-2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
வேலும் மயிலும் துணை



யாழ்ப்பாணம் – பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும்
வதிவிடமாகவும் கொண்டவரும்
உயர்சைவ வேளாண் குலமரபில் தோன்றியவரும்
முன்னாள் பிரபல வர்த்தகருமாகிய

# அமரர் திருவாளர் இராமலிங்கம் தம்பையா அவர்களின்

சிவப்பேறு குறித்து வெளியிடப்பெற்ற

# "ஞாபக மலர்"

22-03-2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

"அன்பால் எமைக்கட்டி ஆசைவார்த்தையால்
எமையணைத்த அன்புத் தெய்வம்"

# சமர்ப்பணம்

அன்புக்கு அணிகலனாய்
பண்புக்கு உறைவிடமாய்
பொறுமையின் பொக்கிசமாய்
பாசத்தின் விருட்ஷமாய்
சுமைதாங்கியாய் வாழ்ந்து
எங்கள் இதயத்தில் என்றும்
அணையாத தீப ஒளியாய் சுடர்வீசும்
எங்கள் குடும்பத் தலைவருக்கு
இம்மலரை சமர்ப்பணம் செய்து
ஆறுதல் அடைகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுகளைச் சுமக்கும்

-: குடும்பத்தினர் :-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோற்றம்:
18-01-1930

மறைவு:
16-02-2022

"ஆயிரம் பிறை கண்ட செம்மல்"
"அன்பினால் அனைவரையும் வருடியவர்"
"இன்சொல் பேசி இறைவனுக்கே அர்ப்பணமானவர்"

# அமரர் உயர்திரு இராமலிங்கம் தம்பையா அவர்கள்

## திதி நிர்ணய வெண்பா

சீர்பூத்த பிலவவாண்டு மாசிலாதிங்கள் மாசியில்
மீண்டுவரும் பௌர்ணமி திதிதனில் - நீண்டபுகழ்
நற்சேவையாளன் தம்பையா பெரியோன் ஏகினார்
பார்வதியாள் பாலகன் தாளடிக்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பஞ்ச புராணப் பாடல்கள்

(ஏழு நாட்களும் பாட வேண்டியவை)

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

## ஞாயிற்றுக்கிழமை

### 1. தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பண் - சீகாமரம் (2ம் திருமுறை

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினைவு
ஆயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்டா வொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே.

### 2. திருவாசகம்

மாணிக்கவாசக சுவாமிகள் (8ம் திருமுறை)

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொலி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே..

### 3. திருவிசைப்பா

பண் - காந்தாரம் கருவூர்த்தேவர் (9ம் திருமுறை)

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4. திருப்பல்லாண்டு

பண் - பஞ்சமம் சேந்தனார் (9ம் திருமுறை)

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடி யார்கள் விரைந்துவம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள் அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றுமென்றும் உள்ள
பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.

### 5. பெரியபுராணம்

சேக்கிழார்பெருமான் (12ம் திருமுறை)

ஆதியாய் நடுவுமாகி அளவிலா வளவு மாகிச்
சோதியாய் உணவுர்மாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியாய் ஏக மாகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்கும்தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.

## திங்கட்கிழமை

### 1. தேவாரம்

பண் - கொல்லி திருஞானசம்பந்தர் (3ம் திருமுறை)

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணிநல் லகதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில்நல் ல.'.திறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்தே.

### 2. திருவாசகம்

மாணிக்கவாசக சுவாமிகள் (8ம் திருமுறை)

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம
வெனப் பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ
சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற்
கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே
வெறுத்திடவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. திருவிசைப்பா

பண் - சாளரபாணி பூந்துருத்திநம்பி காடநம்பி (9ம் திருமுறை)

எம்பந்த வல்லினைநோய் தீர்த்திட் டெமையாளும்
சம்பந்தன் காளியர்கோன் தன்னையுமாட்கொண்டருளி
அம்புந்து கண்ணாளுந் தானும் அணிதில்லைச்
செம்பொன்செய் அம்பலமே சேர்ந்திருக்கை ஆயிற்றே.

### 4. திருப்பல்லாண்டு

பண் - பஞ்சமம் சேந்தனார் (9ம் திருமுறை)

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூமனத் தொண்ட ருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யுஞ்சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

### 5. பெரியபுராணம்

சேக்கிழார் பெருமான் (12ம் திருமுறை)

தூயவெண்ணீறு துதைந்தபொன் மேனியுந்தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழிகண்ணும் பதிகச்செஞ்சொல்
மேயசெவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே.

## செவ்வாய்க்கிழமை

### 1. தேவாரம்

திருவிருத்தம் திருநாவுக்கரசுநாயனார் (4ம் திருமுறை)

ஈன்றாளு மாயெனக்கெந்தையு மாயுடன் தோன்றினராய்
மூன்றா யுலகம் படைத்துகந்தான் மனத்துள்ளிருக்க
ஏன்றா னிமையவர்க் கன்பன் திருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையாயிருந்தனன் தன்னடியோங்களுக்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. திருவாசகம்

மாணிக்கவாசக சுவாமிகள் (8ம் திருமுறை)

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே.

## 3. திருவிசைப்பா

பண் - சாளரபாணி பூந்துருத்திநம்பி காடநம்பி (9ம் திருமுறை)

களையா உடலொடு சேரமான் ஆரூரன்
விளையா மதமாறா வெள்ளானை மேற்கொள்ள
முளையா மதிசூடி மூவா யிரவரொடும்
அளையா விளையாடும் அம்பலம்நின் ஆடரங்கே.

## 4. திருப்பல்லாண்டு

பண் - பஞ்சமம் சேந்தனார் (9ம் திருமுறை)

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற்
றேன்பெற்ற தார்பெறு வாருலகில்
ஊரும் உலகும் கழற
உழறி உமைமண வாளனுக்காள்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4. பெரியபுராணம்

சேக்கிழார்பெருமான் (12ம் திருமுறை)

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத்து விகமே யாக
இந்தவாழ் சடையான் ஆடுமானந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

## புதன்கிழமை

### 1. தேவாரம்

திருத்தாண்டகம் திருநாவுக்கரசு நாயனார் (6ம் திருமுறை)

திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசாராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணிய ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்தும் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே.

### 2. திருவாசகம்

மாணிக்கவாச சுவாமிகள் (8ம் திருமுறை)

வேண்டத் தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற் கரியோய் நீ
வேண்டி யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நியா தருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. திருவிசைப்பா

பண் - பஞ்சமம் சேந்தனார் (9ம் திருமுறை)

ஏகநாய கனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநாயகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

## 4. திருப்பல்லாண்டு

பண் - பஞ்சமம் சேந்தனார் (9ம் திருமுறை)

பாலுக்குப் பாலகன் வேண்டி
அமுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம்பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## 5. பெரியபுராணம்

சேக்கிழார் பெருமான் (12ம் திருமுறை)

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியாழக்கிழமை

### 1. தேவாரம்

பண் - கொல்லி சுந்தரமூர்த்திநாயனார் (7ம் திருமுறை)

தம்மையே புகழ்ந் திச்சைபேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்மையாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர்கெடலுமாம்
அம்மையே சிவ லோகமாள்வதற்(கு)
யாது மையுற வில்லையே.

### 2. திருவாசகம்

மாணிக்கவாசகசுவாமிகள் (8ம் திருமுறை)

அன்றே யென்றன் ஆவியும்
உடலும் உடைமை யெல்லாம்
குன்றே யனையாய் என்னையாட்
கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோ ரிடையூ றெனக் குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

### 3. திருவிசைப்பா

பண் - பஞ்சமம் கருவூர்த்தேவர் (9ம் திருமுறை)

தந்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநூ றாயிரங் கூறிட் (டு)
அத்திலங் கொருகூ (று) உன்கண்வைத் தவருக் (கு)
மெருல களிக்கும் நின் பெருமை
பித்தனென றொருகால் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிவைத்த கங்கை
கொண்டசோ ழேச்சரத் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. திருப்பல்லாண்டு

பண் - பஞ்சமம் சேந்தனார் (9ம் திருமுறை)

தாதைசயத் தாளற வீசிய
சண்டிக்கிவ் அண்டத்தொடு முடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற்
கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## 5. பெரியபுராணம்

சேக்கிழார் பெருமான் (12ம் திருமுறை)

ஞானத்தின் திருவுருவை நான்மறையின்
தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர்
மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார்
சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண் களிப்பக்
கண்டார்கள்.

# வெள்ளிக்கிழமை

## 1. தேவாரம்

பண் - தக்கெசி சுந்தரமூர்த்திநாயனார் (7ம் திருமுறை)

பொன்னும் மெய்ப்பொரு ளுந்தரு வானைப்
போக மம்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை யென்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மைய னென்றறி யொண்ணா
எம்மா னையெளி வந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
யாரூ ரானை மறக்கலு மாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. திருவாசகம்

மாணிக்கவாசக சுவாமிகள் (8ம் திருமுறை)

மெய்தா னரும்பி விதிர்விதிர்த்
துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்தக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னுங்
கைதான் நெகிழ விடேனுடை
யானென்னைக் கண்டுகொள்ளே.

## 3. திருவிசைப்பா

பண் - இந்தளம் திருவாலியமுதனார் (9ம் திருமுறை)

அன்ன நடையார் அமுத
மொழியார் அவர்கள் பயில்தில்லைத்
தென்னன் தமிழும் இசையும்
கலந்த சிற்றம் பலந்தன்னுள்
பொன்னும் மணியும் நிரந்த
தலத்துப் புலித்தோல் பியற்கிட்டு
மின்னின் இடையாள் உமையாள்
காண விகிர்தன் ஆடுமே.

## 4. திருப்பல்லாண்டு

பண் - பஞ்சமம் சேந்தனார் (9ம் திருமுறை)

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணள வும்சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடும் கூடிஎம்
மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. பெரியபுராணம்

சேக்கிழார் பெருமான் (12ம் திருமுறை)

மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்
உண்மை யாமெனின் உலகர்முன் வருகென உரைப்பார்

# சனிக்கிழமை

## 1. தேவாரம்

பண் - திருவிருத்தம் திருநாவுக்கரசுநாயனார் (4ம் திருமுறை)

கருவுற்ற நாள்முத லாகஉன் பாதமே காண்பதற்கு
உருகிற்றென்னுள்ளமும் நானும்கிடந்தலந் தெய்த்தொழிந்தேன்
திருவொற்றி யூரா திருவாலவாயா திருவாரூரா
ஒருபற் றிலாமையும் கண்டிரங் காய்கச்சி யேகம்பனே.

## 2. திருவாசகம்

மாணிக்கவாசக சுவாமிகள் (8ம் திருமுறை)

இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்த்துதேய்ந் தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை யறியகிற் பாரே.

## 3. திருவிசைப்பா

பண் - பஞ்சமம் கண்டராதித்தர் (9ம் திருமுறை)

முத்தீயாளர் நான்மறையர் மூவா யிரவர் நின்னோடு
ஒத்தே வாழும் தன்மை யாளர் ஓதிய நான் மறையைத்
தெத்தேயென்று வண்டுபாடும் தென்தில்லை அம்பலத்துள்
அத்தாவுன்றன் ஆடல்காண அணைவதும் என்றுகொலோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. திருப்பல்லாண்டு

பண் - பஞ்சமம் சேந்தனார் (9ம் திருமுறை)

நிட்டை யிலாவுடல் நீத்தென்னை ஆண்ட
நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்சிராட்டுந்
திறங்களு மேசிந்தித்(து)
அட்டமூர்த்திக்கென் அகம்நெக்ஊறும்
அமிர்தினுக் காலநிழல்
பட்டனுக் கென்னைத்தன் பாற்படுத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## 5. பெரியபுராணம்

சேக்கிழார் பெருமான் (12ம் திருமுறை)

இறவாத இன் அன்பு வேண்டிப்பின்
வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டே
லுன்னை யென்றும்
மறவாமை வேண்டு மின்னும் வேண்டுநான்
மகிழ்ந்து பாடி
அறவாநீ யாடும் போதுன் னடியின்கீ
ழிருக்க வென்றார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## அமரர் உயர்திரு இராமலிங்கம் தம்பையா அவர்களின்

# வாழ்க்கைப் பயணங்களில்......

இந்து சமுத்திரத்தின் கேந்திர ஸ்தானமாக விளங்கும் இலங்கைத் திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணத்தின் வலி மேற்குப் பகுதியில் பண்ணாகம் என்னும் கிராமம் அமைந்துள்ளது. இங்கே அன்பும் ஒற்றுமையும் நிறைந்த மக்கள் ஒரே குடும்பத்தவர் போல் வாழ்கின்றனர்.

பண்ணாகம் கிராமத்தில் விவசாயக் குடும்பத்தில் ஆறுமுகம் .இராமலிங்கம் சுழிபுரம் கிழக்கு முருகேசு சின்னத்தங்கம் தம்பதிகளின் செல்வப் புதல்வனாக 1930.01.18 இல் பிறந்த அமரர் தம்பையா அவர்கள், நல்லம்மா(அமரர்), அன்னம்மா, நேசம்மா, இராசையா ஆகிய நான்கு சகோதரர்களுடன் கூடி வாழும் பேறு பெற்றார்.

தனது ஆரம்பக்கல்வியை யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்திலும் உயர் கல்வியை யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார். இவரது பெற்றோர் வறுமையிலும் செம்மையாக வாழ்ந்தவர்கள். பெற்றோருடன் சேர்ந்து சிறு வயது முதலே விவசாயம் செய்வதில் ஈடுபட்டார்.

உழைத்து பொருள் ஈட்டும் நோக்கில் பண்டாரவளையில் உள்ள வல்லிபுரம் ஸ்தாபனத்தில் முகாமையாளராக பணியாற்றினார். திறமையும் நேர்மையும் விசுவாசமும் நிறைந்த தனது பணியால் ஸ்தாபனத்தின் நன்மதிப்பைப் பெற்றுக் கொண்டார்.

இளமையிலேயே சைவப் பாரம்பரியத்தை பேணுகின்ற இவரது ஒழுக்கத்தையும் பணிவையும் அறிந்த அவரது உறவினரான சைவ பாரம்பரியம் மிக்க கணபதிப்பிள்ளை சண்முகலிங்கம் அவர்கள் தனது சிரேஷ்ட புத்திரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரோஜினிதேவியை 1965 ஆம் ஆண்டு தை மாதம் திருமணம் செய்து வைத்து இன்புற்றார்.

தம்பையா சரோஜினி தேவி தம்பதியரின் இல்லற பூங்காவில் பத்து வருடங்கள் நிறைந்த பின்னரே தவமாய் தவமிருந்து முரளிதரன் எனும் மூத்த மகனும். செல்வப் புதல்வனாய் இரகுராமும், செல்வமகளாய் தங்கசொருபி என்னும் ஆசை மகளும் மக்கட் செல்வங்களாக வாய்க்கப் பெற்று மன மகிழ்ச்சி அடைந்தனர்.

1981 இல் இலங்கையில் நடந்த வன்செயல் காரணமாக அமரர் பணியாற்றிய ஸ்தாபனம் மூடப்பட்டது. அதனையும் கடவுள் போட்ட கட்டளையாக ஏற்றுக்கொண்டு தனது ஊர் திரும்பினார். மனைவி, பிள்ளைகள், சகோதரியுடன் கூட்டுக் குடும்பமாக சந்தோஷத்துடன் சிக்கனமாக தனது வாழ்க்கையை நடாத்தி வந்தார்.

அவரது சகோதரி நேசம்மா தமையனாரின் குழந்தைகளை தன்குழந்தைகளாகவே அன்பு செய்து கல்வியோடு நற்பண்புகளையும் பிள்ளைகளிடத்தே வளர்த்தார். அவர்களது திட்டமிட்ட வாழ்வியல் பாதையே மனநிறைவு உடைய வாழ்க்கைத்தத்துவம் ஆகியது.

தனது மூன்று பிள்ளைகளையும் கல்வியால் மிளிரச் செய்தார். தனது வாழ்வியலினூடாக ஒழுக்கத்தையும் பண்பையும் அவர்களிடையே மலரச் செய்தார். இறை பக்தியுடன் வாழ்ந்த அவரது இல்லத்தின் தவப் பயனாய் வாய்த்த முரளிதரன் யாழ்ப்பாணம் இந்தக் கல்லூரி மாணவனாகி பின் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியலாளராகி பெற்றோர்க்கும் ஊருக்கும் பெருமை சேர்த்தார்

அவர் ஜப்பான் அரசின் புலமைப்பரிசில் பெற்று ஜப்பான் நாட்டில் முதுமாணிப் பட்டத்தையும் கலாநிதிப் பட்டத்தையும் பெற்று பெருமையுடன் தாய்நாடு திரும்பி பெற்றோரை மகிழ்வித்தார். சிங்கப்பூரில் பணிபுரிந்து வரும் முரளிதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையைப் போலவே பண்பும் ஒழுக்கமும் உடையவராகத் திகழ்கின்றார்.

தன் தவப்புதல்வனுக்கு ஓய்வுநிலை நிலஅளவையாளர் நாயகம் கலாநிதி தவலிங்கம் நந்தினி தம்பதிகளின் சிரேஷ்ர புத்திரி வைதேகி அவர்களை இல்லத்தரசியாக்கி மகிழ்ந்தார். முரளிதரன் வைதேகி தம்பதிகளின் இல்லறத்தின் தவப்பயனாய் இபானன், தீட்ஷிதன், ஈசாயினி என மூன்று முத்துக்களை குழந்தைகளாகப் பெற்று சிங்கப்பூரில் சிறப்புடன் வாழ்கின்றனர். சிங்கப்பூர் நாட்டிற்கு தம் குடும்பத்தவரோடு சென்று தன் இரு புத்திரர்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகளோடு சில காலம் குதூகலிக்கும் பேறு பெற்றார்.

அவரது இரண்டவது செல்வப்புதல்வன் இரகுராம் சிறுவயது முதலே சுறுசுறுப்பும் துடிப்பும் மிக்கவர், கல்வி கேள்விகளிற் சிறந்தவர். பாடசாலையிற் கற்கும் போது பாடசாலை சாரணர் அமைப்பில் பல சான்றிதழ்களையும் சின்னங்களையும் பெற்றார். சிறுவயது முதலே தன்னலமற்ற சேவையாளனாக திகழ்ந்தார். "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்பதற்கிணங்க சுவிஸ் நாட்டிற்கு சென்று அங்கு மிகவும் சீரும் சிறப்புடனும் வாழ்ந்துவரும் வேளையில் மூளாயைச் சேர்ந்த நாகராசா கலாநிதி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி ஜனனியை இல்லத்தரசியாக்கி அக்சயா எனும் செல்லப் பெண் குழந்தையை பேர்த்தியாக பெற்று மகிழ்ந்தார்.

தனது அருமை மகள் தங்க சொரூபிக்கு தனது நெருங்கிய உறவினரான சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த குலவீரசிங்கம் தங்கச்சியம்மா தம்பதியினரின் கனிஷ்ட புத்திரன் கண்ணதாசன் அவர்களை வாழ்க்கைத் துணையாக்கி மனநிறைவடைந்தார். இவர்கள் மூலம் கார்த்திகன், ஆதிரை எனும் பேரக் குழந்தைகளை பெற்று குழந்தைகளை ஆரத்தழுவி அன்பு செய்து குழந்தைகளின் அன்பிலே இன்பம் அடைந்தார்.சிறந்த பண்பையும் ஆளுமையையும் பேரக்குழந்தைகளில் வளர்த்தார். பெற்றோரிலும் மேலாக பேரனை நேசிக்கும் குழந்தைகளுக்கு தாத்தாவாகி களிப்படைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பாகவே பொதுப் பணிகளில் ஆர்வம் உடைய அமரர் தம்பையா அவர்கள் இவ்வூர்ப் பெரியோரின் வேண்டுகோளுக் கிணங்க விசவத்தனை முருகன் கோவில் பரிபாலன சபையில் நீண்டகாலம் பொறுப்பான பதவிகளில் சிறப்புடன் பணியாற்றி இறை தொண்டு செய்தார். மேலும் அண்ணா கலை மன்றம், பண்ணாகம் கிராம அபிவிருத்திசங்கம் என்பவற்றில் இணைந்து பொதுப் பணிகளை ஆற்றினார். யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தில் பொருளாளராக விளங்கி பாடசாலையின் அபிவிருத்திக்கு தம்மாலான பணிகளை புரிந்தார்.

"கணக்கெழுதி வாழாதான் வாழ்க்கை கழுதை புரண்ட களம்" எனக்கூறும் அவர் தமது வாழ்க்கைப் பயணத்திலும் பொதுப்பணிகளிலும் கணக்கெழுதும் நற்பண்பினை இறுதிவரை கடைப்பிடித்து வாழ்வாங்கு வாழ்ந்தார்.

தாம் வாழும் காலத்தில் தூய நற்பண்புகளைக் கடைப்பிடித்து ஒழுகியமையால் அவரை ஒருபோதும் நோய் அணுகியதில்லை. திட்டமிட்ட தனது செயற்பாடுகளால் மிகச் சிறந்த குடும்பத்தலைவனாகவும் சிறந்த ஒரு நிர்வாகியாகவும் மிகச் சிறந்த வழிகாட்டியாகவும் விளங்கி தனது குடும்பத்தை செம்மையாக வழிநடத்தி வந்தார்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது". எனும் வள்ளுவன் வாய்மொழிக் கிணங்க அமரர் தம்பையா அவர்கள் கருத்தொருமித்த இல்வாழ்வின் பயன் பெற்று சுகதேகியாக நிறைவான வாழ்வு வாழ்ந்தார்.

அன்புள்ள சகோதரனாக சிறந்ததுணைவனாக, நல்லதந்தையாக, பாசமுள்ள மாமனாக, பேரனாக விளங்கினார். நோயின்றி வாழ்ந்த அவருக்கு15/02/2022அன்று வயிற்றுவலி ஏற்பட்டது. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். மறுநாள் தன் பாசமுள்ள மகளின் கைகளால் நீரை வாங்கி அருந்திய சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொடிகளில் அமைதியாக உறங்கினார். யாருக்கும் துன்பம் தராத அவரதுமரணமும் அவருக்கு இறைவன் தந்த கொடையே.

குடம்பை தனித் தொழியப் புட் பறந்தற்றே உடம்பொடு உயிரிடை நட்பு. என்று திருவருட் பயனில் சொல்லியிருப்பது போல் 92 வருடங்கள் கட்டிக்காத்த உடம்பாகிய கூட்டை விட்டு ஒரு நொடிப்பொழுதில்உயிர் பிரிந்தது. வாழ்க்கை நிலையற்றது என்பதனை உணர்ந்து மனதைத்தேற்றிக்கொள்வோமாக.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்பதற்கமைய அமரர் தம்பையா அவர்கள் வாழ்ந்து இறைபதமடைந்தார்.

உத்தராயண புண்ணிய காலத்தில் உயிர் நீர்ப்பவர் மோட்ச நிலை அடைவர் என்று சொல்வார்கள். இவர் மாசி மாதப் பௌர்ணமித் திதியில் சூரிய சந்திர ஒளியில் உயிர் நீத்தார். நிச்சயம் இறைவனடி சேர்வார்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



50 ஆவது திருமண நாளில் சகோதரியுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வையத்துள் என்னை வாழ்வாங்கு வாழ வைத்த தெய்வம்

ஐம்பத்தேழு வருடங்கள் வாழ்க்கை துணையாகி
ஈருடல் ஓருயிராய் அன்பாக வாழ்ந்தோம்.
தாயில்லாப் பிள்ளை என்ற குறையின்றி
உங்களுடன் வாழ்ந்தேன்.

சுவையே இல்லாத என் சமையல் சுவைத்தே உண்பீர்கள்.
சுடு சொல்லால் ஒருபோதும் மனம்நோக பேசியதே இல்லை.
அம்மா என்றே அன்போடு அழைப்பீர்கள்.
அருகே இருந்து எனது ஆலோசனை கேட்பீர்கள்.

குழந்தை இல்லை என்று நான் குறைபட்டு மனம் நொந்தால்
காலம் இருக்குது கலங்காதே என்பீர்கள்.
கடவுள் அருளாலே குழந்தைகள் செல்வமாகி
கூட்டுக் குடும்பத்தில் குதூகலமாய் வாழ வைத்தீர்கள்.

கண்ணியமாய் கணக்கெழுதி சிக்கனமாய் வாழ்ந்தீர்கள்.
நறுக்காய் கதை சொல்லும் மிடுக்குடனே வாழ்ந்தீர்கள்.
நேர்மையும் தூய்மையும் உங்களது அடையாளம்.
உள்ளத்தின் தூய்மையை உடையிலேயே காட்டினீர்கள்.

வஞ்சகமே இல்லாத புன்சிரிப்பு
வாழ்க்கையில் கிடைத்த வரமெனக்கு
எல்லாமே தொலைத்துவிட்டு
ஏங்கியே தவிக்கின்றேன்.

பொற்றாலியோடு ஏவையும் போம்.
பொல்லாத சோகத்தை சுமக்காமல்
செல்ல மனைவியாய் சென்றிடலாம் என்றிருந்தேன்.
தோற்றேதான் போனேன்.

வாழ்வில் எனக்கெதையும் மறுத்ததில்லை.
இதை மட்டும் ஏனோ சொல்ல மறந்தீர்கள்
தாயாய் தந்தையாய் நல்ல தலைவனாய்
என்னை நேசித்த உண்மை அன்பு.

வாழும் காலம் வரை நினைந்தழுவேன்.
உங்களுக்கு பின்னேயும் என்வாழ்க்கை கணக்கெழுதி
காலமெல்லாம் நினைந்தழுவேன்.
**எத்தனை உறவுகள் உயிர்ப்பாய் இருந்தாலும்**
**உங்கள் உறவுபோல் உலகில் எனக்கு கிடைக்காது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த மகனின் மனக்குமுறல்

அயல் நாட்டில் வாழும் நான் அன்றொரு செய்தி கேட்டேன்,
தடுமாறிய என் தங்கை தந்தைக்கு வருத்தமென்றாள்.
செய்திகேட்ட நானும் செல்வதற்கு முனைந்து நின்றேன்,
கொடூர கொறோனா என்னை உடன் செல்ல விடவில்லை.

நானும் பயணம் செய்ய நாட்குறித்து வைத்திருந்தேன்,
நல்ல செய்தி வந்தது மறுநாள் நலமாக உள்ளாரென்று.
செய்தி கேட்டு நானும் சிந்தை மகிழ்ந்த போது,
மறுசெய்தி வந்தது அப்பா மரணித்து விட்டாரென்று.

செத்துவிட்டார் என்று செய்தி கேட்டவுடன்,
கத்திக் கதறி கண்ணீரால் நனைந்துவிட்டேன்.
உடன்போக முயற்சித்தேன் என் நாடு விடவில்லை,
எவ்வளவு முயற்சித்தும் என்னால் முடியவில்லை.

தந்தைக்கு கொள்ளி வைக்க நான் வருவேன் என்று சொல்ல,
தந்தை விருப்பம் தன்னை தவறியவுடன் தகனம் செய்ய வேண்டுமென்று.
இரு நாட்கள் வைத்திருந்தால் நானும் சென்று சேர்ந்திரப்பேன்
என்கடன் செய்ய எனக்குக் கொடுத்து வைக்கவில்லை.

என் மனது ஆற சாம்பல் எடுத்து வைத்தார்கள்,
எடுத்துச் சென்று அதை ஏரியில் கரைத்துவிட்டேன்.
கடல் கடந்து வாழ்ந்ததனால் என் கடமை செய்ய முடியவில்லை,
கனத்த மன அழுத்தம் என்னைக் கட்டிப்போடுதப்பா.

சற்றும் எதிர்பாராமல் சடுதியில் நீங்கள் இறந்ததனால்,
சந்தித்து உரையாட சந்தர்ப்பம் கிட்டவில்லை.
தவமிருந்து பெற்றதனால் எனக்கு "தவம்" என்று பெயரிட்டீர்களாம்,
தவப்புதல்வன் தன் கடமை சரிவரச் செய்யவில்லை.

என்னைச் சுமந்த நீங்கள் என் கனவுகளையும் சுமந்தீர்களே,
நீங்கள் காணா உயரங்களை நான் காணவைத்தீர்களே.
பல்கலைக் கழகம் நான் செல்ல பஸ் ஏறி வந்தீர்களே,
பட்டம் பெற்ற என்னை பலரிடம் கூறி மகிழ்ந்தீர்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்த நீங்கள்,
பண்புடைமை காத்து பக்குவமாய் வழி நடந்தீர்களே.
வெள்ளை உடை உடுத்து வெள்ளை மனம் கொண்டிருந்தீர்கள்,
நாணயம் தவறா நல்லவராய் வாழ்ந்திட்டீர்கள்.

காலனோ தன் கணக்கை சரிவர முடித்துவிட்டான்.
தனயனோ தன் கணக்கைச் சரிவரச்செய்யவில்லை.
மீளாத்துயில் கொண்டு என்னை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டீர்கள்
என் கண்ணீர் துளிகளை உங்களுக்கு காணிக்கையாக்குகின்றேன்.

கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்,
என் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும் அப்பா.
மண் விட்டு நீங்கள் விண்நோக்கிச் சென்றாலும்,
கண் விட்டு மறையாமல் காலமெல்லாம் இருப்பீர்கள் அப்பா....

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் பாசமுள்ள மகன்
**கலாநிதி த. முரளிதரன்**
(பொறியியலாளர்)
சிங்கப்பூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் உள்ளத்தில் குடி கொண்ட தெய்வம்...

அப்பா எம்மை விட்டுப்பிரிந்த செய்தியை நம்புவதற்கு எனக்கு நீண்ட நேரம் பிடித்தது. என் முன்னால் வெள்ளை வேட்டியும் வெள்ளை சேட்டும் அணிந்து நிற்பது போன்ற தோற்றம் தான் என் மனக்கண் முன்னே வந்து நின்றது. என்னை அறியாமலே "அப்பா" என அழைத்து அழுதுவிட்டேன். எனது மகள் ஓடிவந்து ஏன் அப்பா அழுகின்றீர்கள்? என்ற போது தான் எனக்கு நான் எங்கு இருக்கின்றேன் என்ற நிலை தெரிந்தது. கண்களை துடைத்துக்கொண்டு எனது மனைவிக்கும் பிள்ளைக்கும் அப்பாவின் மரணச் செய்தியை தெரிவித்தேன்.

நான் படிக்கும் காலத்தில் எனது தவறுகளுக்காக அப்பா என்னை கண்டிப்பார். அப்போது (எனதுஅறியாப்பருவம் காரணமாக) அவர் மேல் எனக்குக் கோபம் வரும். அவர் என்மேல் வைத்திருந்த கண்டிப்பும் கோபமும் என்னை மற்றவர்களின் முன்னால் நிமிர்ந்து நின்று வாழ்வதற்காகத்தான் என்பதைப்புரிய எனக்கு நீண்டகாலம் எடுத்தது. நான் சிறுவயதாக இருக்கும் போது இரவில் எங்கள் வீட்டுநாய்கள் பெருங்குரலில் குரைக்கும். எனக்குப்பெரும்பயமாக இருக்கும். உடனே அப்பா வெளியே சென்று ரோச்லைட் அடித்துப்பார்த்து விட்டு மரநாய் தான் வந்தது பயப்படாதீர்கள் என்று கூறுவார்.

அப்போது அப்பா எங்களை காப்பாற்றுவார் என்ற தைரியத்துடன் தூங்குவேன். அப்பா இருந்தால் எமக்குப்பயமில்லை என்ற எண்ணம் தோன்றும். அப்பாவின் தூய உடையும் நேர்மையான நடத்தையும் நல்ல ஒழுக்கமும் ஏனையோருக்கு உதவும் பழக்கமும் என்னை மிகவும் கவர்ந்துள்ளன. அவரிடம் நான் கற்றுக் கொண்ட பண்புகள் தான் என்னையும் நல்லொழுக்கத்துடனும், நேர்மையாகவும், ஏனையோர் மதிக்கக்கூடிய முறையிலும் வாழ வழிவகுத்துள்ளன.

அப்பா தான் என் வழிகாட்டி என்பதை நன்கு உணர்கிறேன். அவருக்குப்பிள்ளையாக கிடைத்தது நான் செய்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



92ஆவது பிறந்தநாளில் பேரப்பிள்ளைகளுடன்
18-01-2022



சிங்கப்பூரில் தனது இரு புதல்வர்கள் குடும்பத்தினருடன்
(2012)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கியமே. நாட்டு நிலை காரணமாக அப்பாவுடன் நீண்ட காலம் வாழ எனக்குக்கிடைக்கவில்லை என்ற வேதனை என் மனதை நெருடிக்கொண்டே இருக்கின்றது. உங்களின் பிற்காலத்தில் உங்களுடன் இருந்து உங்களுக்கு சேவை செய்ய எனக்கு கிடைக்கவில்லை அப்பா. மீண்டும் பிறப்புண்டேல் என்றும் உங்கள் மகனான இருக்க இறைவனை வேண்டுகின்றேன். மறைந்தாலும் என் அப்பா என் இதயத்தில் குடிகொண்டு இருக்கின்றார் என்ற எண்ணத்துடன் அப்பாவின் ஆத்மா சாந்தியடைய இறையருளை வேண்டிநிற்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இளைய மகன்

**த. இரகுராம்**

(சுவீஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்ல மகளின் உள்ளக் குமுறுல்

பாசமாய் பக்குவமாய் எனை வளர்த்த,
பேசரிய பொக்கிஷமே அருமை அப்பா!
நேசமாய் நேர்மையாய் வாழ வைத்தீர்கள்.
வரமாய் கிடைத்த தெய்வமாய் எமக்கு வாய்த்தீர்கள்

நேரிய பெருமையுடன் வாழ்ந்து காட்டி
நல்லதொரு தந்தைக்கு இலக்கணமாகி நின்றீர்கள்
ஆசானாய் அருமைத் தலைவனாய்
சத்தியத்தின் வழி தன்னை காட்டி வைத்தீர்கள்.

முந்தைய தவத்தின் முழுப்பயனாய்
தந்தையாய் எமக்கு நீங்கள் கிடைத்தீர்கள்.
சிந்தையில் நம் உயர்வையே எண்ணி எண்ணி
சிக்கனத்தின் வழிநின்றே வாழ வைத்தீர்கள்.

நிந்தையிலா பெருவாழ்வு பெற்றோம்.
நேசமுள்ள தியாகத்தின் இருப்பிடமே அப்பா.
எந்தையே எமதில்லம் சிறக்க ஒளி தந்தீர்கள்.
ஏழேழு பிறவிக்கும் உமை மறக்க மாட்டோம்.

கடின உழைப்பினால் கல்விஒளி தந்தீர்கள்.
காலமெல்லாம் கண்ணியத்தை கட்டிக்காத்தே வாழ்ந்தீர்கள்.
தேடிய செல்வங்கள் என் பிள்ளைகள் என்பீர்கள்.
தெவிட்டாத உங்கள் பாசம் தொலைத்துவிட்டோம் நாங்கள்.

நல்லதொரு தலைவனை இழந்ததெங்கள் குடும்பம்.
நமக்கெல்லாம் நாளும் அதுவெற்றிடமே.
சொல்லாத சோகத்தை சுமையாய் தந்தீர்கள் அப்பா.
**“சொரூபா”** என அழைக்கும் ஓசைக்காய் ஏங்குகின்றேன்.

பெருமையாய் எங்களை பேசுகின்ற அப்பா
பாசத்தால் எமை எல்லாம் கட்டிப்போட்டீர்கள்.
மறுமையிலும் நாம் உங்கள் மடி தவழ வேண்டும்
மாசற்ற அன்பிலே நாம் திளைக்க வேண்டும்.

திருமணம் செய்து நான் தாயான பின்னும்
பிள்ளைப்பாசம் மாறிடாது குடும்ப பாரம் சுமந்தீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்கெழுதி வாழ்ந்த என் அப்பாவை காப்பாற்றிவிடலாம்
என்றே கடைசி வரை காத்திருந்தேன்.

ஒரு பொழுதேனும் கடமை செய்ய கிடைக்காத பாவியானேன்.
அழகான சிரிப்பும் அர்த்தமுள்ள பேச்சும் அழியாது நிற்கிறது.
எத்தனையோ உறவு வரும். அப்பா எனும்
ஒப்பற்றஉறவு ஆயுளுக்கும் ஒன்றேதான்.

எப்போது என்றாலும் என் அப்பா என் சொத்து.
என் நினைவில் என்றும் கலந்திருப்பார்.
மீண்டுமொரு பிறப்பொன்று உண்டானால்.
உங்களுக்கு மகளாகும் பேறுவேண்டும்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

செல்லமகள்
**க. தங்கசொரூபி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசத்தால் கட்டிய பந்தம் இன்றில்லை

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற வாக்கிற்கமைய அமைதியின் உருவமாகவும் அடக்கத்தின் இருப்பிடமாகவும் பண்பில் பெருந்தகையாகவும் பாசத்தின் உறைவிடமாகவும் எம் மத்தியில் அன்பொளியாக இருந்த உத்தமர். உள்ளன்போடு உறவுமுறை பகிர்ந்து வாழ்ந்தவர். இன்று எம் மத்தியில் இல்லாதது வெறுமையாகியது.

உங்கள் கடைசிக் காலம் வரை விடாமுயற்சி இடைவிடாத சுறுசுறுப்பு வாழ்க்கையில் சிக்கனமாக வாழ்ந்தவரே உங்களுடைய சிக்கனமான வாழ்க்கையை இடம்பெயர்ந்து வரணியில் வாழ்ந்த காலத்தில் அறிய முடிந்தது கூட்டுக் குடும்பமாக ஒன்றாய் சமைத்து ஒன்றாக உண்டு மகிழ்ந்தோம். உங்களுடைய நேர்மைக் கணக்கு எழுதி ஒருவரிலும் துன்பம் ஏற்படாத வண்ணம் சிக்கனமான செலவு பண்ணி குறைந்த செலவில் எல்லோரும் வாழக்கூடிய வழிசெய்த உத்தமர். இன்று எங்கள் முன் இல்லை.

வீட்டுக்கு வந்தால் எல்லாப் புதினமும் சொல்லுவீர்கள் தம்பியார் என்ன செய்கிறார். நடப்பாரோ என்று கேட்பீர்கள் அன்று (15-02-2022) வைத்தியசாலையில் நீங்கள் இருந்தபோதும் கூட எங்களைக் கண்டவுடன் இன்முகத்தோடு வரவேற்று என்னால் கனக்கக் கதைக்க முடியவில்லை களைப்பாக இருக்கிறது. என்று கூறி அந்தநேரமும் பிள்ளையிடம் "மாமா என்ன செய்கிறார்" என்று கேட்டீர்கள் அவ்வளவு சகோதர பாசம் எல்லவற்றை'யும் விட்டு இவ்வளவு விரைவாக இறைவனடி சேருவீர்கள் என்று நாம் நினைக்கவில்லை.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவன் அருள் வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி... ஓம் சாந்தி... ஓம் சாந்தி...

**அன்புச் சகோதரன்**
**இராசையா குடும்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட நல்ல மனிதர் என் சம்பந்தி அமரர் இ. தம்பையா.....

மணமக்களின் பெற்றோர்களை "சம்பந்தி" என்று சொல்வோம். ஆனால் இன்று அதுவும் மருவி "சம்மந்தி" என்று ஆகிவிட்டது. உண்மையில் சம்பந்தி என்றால் சம்- நல்ல் பந்தி- உறவு. நம் வீட்டிற்கு சம்பந்தி வந்திருக்கிறார் என்றால், "நல்ல உறவினர் வந்திருக்கிறார்" என்பது பொருள். ஆனால், இன்று யாரும் சம்பந்தி என்று அழைப்பதில்லை. சம்மந்தி என்றே அழைக்கிறோம். நாம் சம்மந்தி என்று அழைத்தால் அதனைப் பிரித்துப் படித்தால் அது பிழையான பொருளைக் கொடுத்துவிடும்.

அன்பைப் பகிர்ந்து வாழ்கின்ற வாழ்க்கை இனிமையானது, இதமானது , உன்னதமானது. அந்த உண்மையான வாழ்க்கையே என் சம்பந்தி அமரர் தம்பையா அவர்கள் தேடிக்கொண்டார். அவர் தன் சொந்த முயற்சியால் முன்னேற்றம் பெற்றவர். அகமும் முகமும் மலர எல்லோரையும் வசீகரிக்கும் சுபாவம் கொண்டவர். அவர் சொல்லும் வார்த்தைகளைச் செயலில் காட்டுபவர்.

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்*
*தெய்வத்துள் வைக்கப் படும்"* - *குறள்*

ஒருவன் இல்லறத்தில் வாழ்ந்துக்கொண்டு இருக்கும் பொழுது அவனால் தெய்வீக நிலையை அடைய முடியுமா? முடியும் என்கிறார் திருவள்ளுவர். ஒருவர் இல்வாழ்கையில் வாழ்வதற்கான நெறிகளை கடைப்பற்றி நெறி தவறாது வாழ்ந்தால் அதுவே சிறப்பான வாழ்வு. அத்தகையவர்களை வான் உயரத்தில் இருக்கும் தெய்வங்களாக வைத்து வணங்கப்படுவர். தெய்வத்திற்கு நிகரான பெருமை அவர்களுக்கு கிடைக்கும் உதாரணமாக ஒரு குடும்பத்தில் ஒருவர் அக்குடும்பம் சிறக்க காரணம் பெற்றார் என்றால் அவர் அக்குடும்பத்தினால் பல ஆண்டுகாலம், பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்சங்களாக போற்றப்படுவார். இவ்வாறு வாழ்ந்தவர்தான் என் சம்பந்தி அமரர் தம்பையா அவர்கள்.

அவரின் சீரிய செயல்களையும் நற்பண்புகளையும் அவரின் மூன்று பிள்ளைகளிலும் காணக்கூடியதாக இருக்கின்றது. கால ஓட்டத்தில் நாம் தூர இருந்தாலும் எம் அன்பு குறையவில்லை. நித்தமும் நினைவில் வரும் அவருக்குள் உறைந்த உயர்மனிதப் பண்புகள் பல என்னுள் பதிந்த இடம் என்றும் பசுமையாக நிலைத்து நிற்கும். அவரின் ஆத்மா சாந்தி அடைய நான் உளமார பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சம்பந்தி
**கலாநிதி க. தவலிங்கம்**
ஓய்வுநிலை நிலஅளவையாளர்நாயகம்
கொழும்பு – 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் பெரியத்தான் ஒழுக்க சீலராக வாழ்ந்த உத்தமர்

எங்கள் குடும்பத்தில் மகாலட்சுமியாகத் திகழ்ந்த அன்பும் பண்பும் அறிவும் பொறுமையும் ஒழுக்கமும் நிரம்பிய எனது பெரியக்காவிற்குக் கணவனாக வாய்த்த உத்தமர் என் பெரியத்தான்.

எங்கள் தந்தையாரிடம் மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொண்டவர். மைத்துனிகள் மைத்துனர்களிடம் அன்புடனும் பண்புடனும் உறவு பாராட்டும் உயரிய பண்பாளர் யாரையும் மனம் நோகப் பேசாதவர். உரிய நேரங்களிளெல்லாம் பல வழிகளிலும் கைகொடுத்துதவிய அன்புள்ளம் கொண்டவர் எமது அத்தான். மனித நேயமும் மாசற்ற ஒழுக்கமும் உடைய பண்பாளர் யாரிடமும் எதையும் எதிர்பாராது வாழ்ந்த பெருந்தகையாளர்.

எனக்கு தனிப்பட்ட முறையில் பல உதவிகள் செய்தவர் என் மாமன் மகளை திருமணம் செய்ய முன்னின்று கதைத்தவர். நானும் மனைவியும் வாழ தனது வீட்டைத் தந்துதவியவர். எனக்கு தோட்டம் செய்ய நெல்விதைக்க காணியைத் தந்துதவினார். நான் சுவீஸ்லாந்து போக பணவுதவி செய்த பண்பாளர். என் அத்தானின் இறப்பு மிகவும் மன வேதனை. ஆண்டாண்டு அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ? இவைகள் யாவும் இறைவன் நியதிகள். கட்டுப்பாடான வாழ்க்கை வாழ்ந்த கண்ணியவான்.

எங்கள் குடும்பத் தலைவன் இன்று எங்களை விட்டுப் பிரிந்த வேதனையில் நாமனைவரும் அத்தானின் ஆத்மா சாந்தியடைய முருகப்பெருமானின் திருவடிகளை பிரார்த்தித்து அவரின் நினைவுகளை நம் உயிருள்ள வரை நினைவு கூருவோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் பாசமுள்ள

**மைத்துனர் குடும்பம்**

**சண். கணபதிப்பிள்ளை**

**(பண்டம், சந்திரா, பிள்ளைகள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் நினைவில் நீங்காத பெரிய மாமா

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் எங்கள் பெரியமாமா! உங்களின் மறைவு எங்களுக்கு பேரிழப்பாகும். வேகமாகச் சுழன்று கொண்டிருக்கும் வாழ்க்கைச் சக்கரத்தில் நீர்க் குமிழிகள் போல மனித வாழ்க்கை தோன்றி மறைகிறது. ஒரு சில மனிதர்களுடைய வாழ்க்கை மட்டுமே வரலாறு ஆகிறது, வழிகாட்டியாகிறது, அதற்கு காரணம் அவர்கள் வாழ்ந்த இடத்தில் விட்டுச் சென்ற அழிக்க முடியாத தடயங்கள்.

கனிவான உள்ளம், பாசமான உறவு, அமைதியான பேச்சு, புன்னகை நிறைந்த வரவேற்பு, தூய்மையான இறை நம்பிக்கை இவற்றைக் கொண்ட நிறைவான மனிதரே எங்கள் பெரியமாமா.
நான் அவர்கள் குடும்பத்தில் வந்த முதல் பேரப்பிள்ளை என்பதால் எல்லாரும் பாசம். அதனால் மாமா என்னைப் பெயர் சொல்லாது “பிள்ளை” என்றே இறுதி வரை கூப்பிட்டார். நான் என்ன கேட்டாலும் செய்து தருவார். நானும் மாமாவிடம் ஆலோசனை கேட்டுத்தான் செய்வேன்.

பிற்காலத்தில் நான் அவர்களைப் பார்க்க வரும் போது எல்லாம் ஒன்று சொல்லுவார். சின்னமாமா ஏலாது போக முன் அடிக்கடி வருவான் இப்ப நீ ஒருத்தி தான் வருகிறாய் என்பார். அதை நினைக்க தாங்க முடியவில்லை. பெரிய மாமாவை இழந்தாலும், அவரின் நினைவுகளை என் இதயத்தில் சுமக்கிறேன். அவரின் ஆத்ம சாந்திக்காக பிராத்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஆசை மருமகள், பிள்ளை**

**விஜயசெல்வி சிவகுமார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவு கூரல்

பன்னரிய குணமுடைய உங்களைப்போல் பண்பாளர் உலகினிலேயார்தான் உள்ளார். வண்ணமுறும் உங்களது வடிவு காணோம். புன்முறுவலுடன் வரவேற்கும் உங்களது சொல்லைக்காணோம். ஆதியிலே நாங்கள் கூடி வளரவில்லை அன்பாலும் கனிவாலும் எல்லோரையும் அரவனைத்துக்கொண்டீர்.

பாதியிலே எங்களை விட்டு ஏகிவிட்டீர், பண்பான மாமா உங்களை எப்போது காண்போம்? சோதியென மிளிர்ந்த உங்கள் முகம் எங்கேசொல்லரிய திறமுடைய பேச்சு எங்கே? கண்டவுடன் எங்களை வாரி அனைத்துக் கொள்ளும் கருதரிய குணம் படைத்த எங்கள் மாமா மீண்டிடவும் முடியாத துயரம் கொண்டோம், விம்மியழுதாற்றுகின்றோம் மீளவாரீர்.

தருமங்கள் பலசெய்து தரணிபோற்ற வாழ்ந்தீர்கள் பெருமையாக எங்கள் மாமா என்று செல்வதற்கோர் பெரும் பேறு பெற்றிருந்தோம். மர்மமாய் வந்த காலன நாமும் பார்த்திருக்க உங்கள் உயிரைத் தான் கவர்ந்து சென்றான். எங்களைக்கண்டவுடன் சிரித்தமுகத்துடன் இருகரம் கூப்பி "அன்பே சிவ்ம்" என்று வரவேற்கும் இனிய பண்பாளனை 'எப்போது காண்போம்?

எங்கள் சிம்மக்குரலோன், தொலை நோக்கு சிந்தனையாளன் இலங்கைத்தமிழரை உலகறியச் செய்த, தன்னலமற்ற பெருந்தலைவர் மாமனிதர் மறைந்த உயர் திரு. அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் மீது மதிப்பும் மரியாதையும், உங்கள் தமிழ்பற்றும் எப்போதும் எங்கள் மனதில் வண்ணக் கோலங்கள் இட்டு நிற்கின்றது.

உங்களுடன் உரையாடும் போதெல்லாம் உங்கள் வார்த்தைகளில் உதிர்ந்த தத்துவமுத்துக்களில் ஒரு சில

1. சிக்கனமும் சேமிப்பும் வாழ்க்கைத்தரத்தை உயர்ததும் கருவிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கடின உழைப்பு, விடாமுயற்சி, நேர்மை, உறுதியான சிந்தனைகள் வெற்றிக்கு அடிப்படை.
3. இன்று செய்யவேண்டியதை நாளைக்கென்று ஒத்திவையாதே.
4. கோபத்தோடு வருபவனிடத்தில் குளிர்ந்த முகத்தோடு பேசு.
5. சுய ஒழுக்கம், சமூக ஒழுக்கம் கொண்ட மனிதன் பெரியாராகின்றான்.

மாமா நீங்கள் செய்த தர்மகாரியங்கள் உங்களை சொர்க்கத்தில் கொண்டு சேர்த்திருக்கும். நேசிப்பவரை இழப்பதுமிகவும் கடினம் இந்த சோகத்தின் வலி மிகவும் வேதினையானது. திருவாளரை இழந்து தவிக்கும் அன்னாரது குடும்பத்தாருக்கும் மன ஆறுதல் கொடுக்க இறைவன் வேண்டி அவரது ஆத்மா நிம்மதியாக ஓய் வெடுக்கட்டும்.

ஓம் சாந்தி... ஓம் சாந்தி... ஓம் சாந்தி...

இவ்வண்ணம்

**லோகேந்திரா குடும்பத்தினர்**

**கோகுலம்,சுழிபுரம் கிழக்கு**

**ஓய்வு பெற்ற நிர்மாணத்துறை**

**பாதுகாப்பு ஆலோசகர் டுபாய்**

(RETD. CONSTRUCTION SAFETY ADUISOR DUBAI)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிடத்தின் வடிவே
# அமரர் தம்பையா அண்ணர்

"பண்புடையார் பட்டுண்டு உலகம்" என்பது வள்ளுவம். பண்புள்ளளவர்களால் தான் உலகம் நிலைபேறுடையதாக அமைகின்றது. உலகின் நிலைபேற்றிற்கு அடிப்பபடை அறம். ஆகும். அந்த அறத்தைப் பேணிவாழ்பவர்கள் தான் மானிடன் என உலகம் போற்றுகின்றது. எனவேதான் "அறம் செய விரும்பு" என ஒளவைப்பாட்டியின் அற்புதத் தொடர் எடுத்து விளக்குகின்றது. நல்லொழுக்கம் உள்ள இராமலிங்கம் சின்னத்தங்கம் பெற்றோர்களுக்கு முதற்குழந்தையாகப் பிறந்து பெற்றோரின் அன்பான அரவணைப்பில் வளர்ந்து கல்வி கற்று மலையகத்தில் பண்டாரவளையிலுள்ள "வல்லிபுரம் அன் சன்ஸ்" என்ற வர்த்தக ஸ்தாபனத்தில் முகாமையாளராகப் பணிபுரிந்து பின் ஓய்வுபெற்று பண்ணாகத்தில் வாழ்ந்தவர் அமரர் இராமலிங்கம் தம்பையா. இவர் அறநெறி பிறழாமல் வாழ்ந்த ஒரு உதாரண புருஷனாகத் திகழ்ந்தவர்.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். கள்ளமில்லா அவருடைய உள்ளத்தை அவருடைய முகத்தின் புன் முறுவவல் வெளிப்படுத்தி நிற்கும். ஆடவருக்குரிய எடுப்பான தோற்றம் அவருடைய வெள்ளை வேட்டி மேலங்கி என்பன எப்போதும் தூய்மையாகவே இருக்கும். அவருடைய உதடுகள் இன்சொல்லை பேசுவதன்றி வன் சொல்லை அறியாது அறத்துக்கே அன்பு சால்பென்பார் மறத்துக்கும் அஃதே துணை என வாழ்ந்தவர்.

தன் பெற்றோரை மதித்து போற்றி அவர்களின் பணியைக் குறைவின்றிச் செய்தார். தன் உடன் பிறந்தவர்களை அவர் கண்ணும் கருத்துமாக பராமரித்தவர். உறவினர்கள் ஊரவர்கள் எல்லோருடனும் அன்பு பாராட்டி வாழ்ந்தவர். கிராமப்பற்றும் நாட்டுப் பற்றும் உள்ளவர். பண்ணாகம் அவருடைய தந்தையாரின் ஊராகவும் சுழிபுரம் அவரின் தாயாரின் ஊராகவும் இருப்பதனால் இரண்டு கிராமங்களின் வளர்ச்சியிலும் அக்கறை கொண்டவர் பண்ணாகக் கிராமத்தில் வசிப்பதனால் அங்கு உள்ள பெரும்பாலான பொது அமைப்புகளில் தலைவர், செயலாளர், பொருளாளர் நிர்வாக உறுப்பினர் எனப் பல பதவிகளிள் வகித்து கிராமத்தின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டவர். சுழிபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கன் மிஷன் பாடசாலை சிறப்பாக வளரவேண்டுமென்று அவ்வப்போது நிதிப்பங்களிப்புச் செய்தவர்.

அவருக்கு அரசியலறிவும் இருந்தது தமிழர் இந்தநாட்டில் சிறப்பாக வாழ வேண்டும் அதற்குத் தமிழர்களிடையே ஒற்றுமை நிலவவேண்டும் என்று மனதில் ஆசை கொண்டவர். மேலும் அவருடைய குடும்ப வாழ்க்கை சிறப்பானது. அன்றிலும் பெடையும் போன்று கணவனும் மனைவியும் கருத்தொருமித்து வாழ்ந்து வந்தனர். அவர் தம்பிள்ளைச் செல்வங்களை நல்லொழுக்க முள்ளவர்களாகவும் மற்றவர் மதித்துப் போற்றும் அறிவாளிகளாகவும் வளர்த்தெடுத்த பெருமைக்குரியவர்.

அவருடைய மருமக்கட் செல்வங்களும் மானிடப் பண்பாளர்கள். ஒரு தனிமனிதனாக அன்றி அவர் குடும்பமே மானிடம்சார்ந்தது. அன்பு, சத்தியம், தர்மம், நேர்மை, பொறுமையுடைமை, சேவை, சகிப்புத்தன்மை போன்ற மானிடப் பண்பைப் பேணி மானிடனாக வாழ்ந்து அமரத்துவம் அடைந்த அமரரின் வாழ்வு நமக்கெல்லாம் வழிகாட்டி ஒளியூட்டி ஆற்றுப்படுத்துவதாகும்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**திருமதி. நாச்சியார் செல்வநாயகம்**
ஓய்வுநிலை முதுநிலை விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வாங்கு வாழ்ந்த அத்தான்
## அமரர் இ. தம்பையா அவர்கள்

இன்று அமரராகிவிட்ட அத்தான் இராமலிங்கம் தம்பையா அவர்கள் பண்ணாகம் மண்ணில் நீடித்த ஆயுளுடன் வாழ்வாங்கு வாழ்ந்த ஓர் மனிதன். பால்போன்ற அழகிய வெண்ணிற ஆடை உடுத்தி சிவப்பு நிற மேனியுடனும் புன்சிரிப்புடனும் அன்பொழுக் தம்பி அமிர்தம் என அழைக்கும் அந்தக் குரலும் மறைந்த அந்த உருவுமும் கண்முன்னே வந்து நிற்கின்றது.

எனது உறவினரும் அயலவருமான அவரிடம் கோபப்படாத சாந்த சுபாவம் ஒழுக்கமான வாழ்வு தனது சகோதரி குடும்பம் மகள் குடும்பம் தன் குடும்பம் மூன்றையும் நிர்வகித்து சந்தோஷமாக வாழ்க்கையை நடத்திய அந்தத் திறமை எவராலும் இயலாததோர் காரியம் "துரைத்தனம் நடத்தலாம் ஆனால் குடித்தனம் நடத்தல் மிகவும் கஸ்ரம்" என்பது முதுமொழி. இது அவரது ஆளுமையின், நேர்மையின் உச்சமான வெளிப்பாடாகும். தனது தனிப்பட்ட வாழ்க்கையிலும் சரி வேறு பல பொதுச் சேவைகளிலும் சரி அவர் எதையும் எழுதி வைக்கும் இயல்பினை வழக்கமாகக் கொண்டவர். "கணக்கெழுதி வாழாதான் வாழ்க்கை கழுதை புரண்ட களம்" என்று அடிக்கடி அவர் கூறுவதைக் கேட்டிருக்கின்றேன்.

அமரர் அத்தான் அவர்கள் மிகுந்த நாட்டுப் பற்றும் இனப் பற்றும் உள்ளவர். தனது இளரமக் காலத்தில் பண்டாரவளை சென்று வியாபாரத் தொழிலில் ஈடுபட்டு பெரும்பொருள் ஈட்டினார். ஊர்பற்றுள்ள அவர் பின்பு சொந்த ஊரான பண்ணாகம் வந்து பிள்ளைகளை வளர்த்தெடுத்து உதாரண புருஷர்கள் ஆக்கினார்தனது வாழ்க்கைக் காலத்தில் பல்வேறு பொதுப் பணிகளான விசுவத்தனை முருகன் பரிபாலன சபைகிராம அபிவிருத்திச் சங்கம், அண்ணா கலை மன்றம், அன்னதான சபை, ஐக்கிய நாணய சங்கம் எனப் பல்வேறு பொது அமைப்புகளில் ஈடுபட்டு மக்கள் சேவையையும் மகேசன் சேவையையும் இணைத்துச் செயற்பட்டார். தனது பிள்ளைகளை பொறியியலாளர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைப்பட்டதாரி ஆக்கியதுடன் இரண்டாவது புதல்வனை "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" எனும் முதுமொழிக்கிணங்க சுவிஸ்சர்லாந்து நாட்டிற்கு அனுப்பினார். அவர் அங்கு மிகவும் சிறப்புடன் வாழ்கின்றார். கண்ணியமான மருமகனாக கண்ணதாசனையும் பெற்றார். பேரப்பிள்ளைகளையும் கண்டு இன்புற்றிருந்து வாழுகின்ற இந்த இனிய வாழ்க்கை தனக்கு கிடைத்தமைக்கு காரணமாக தனக்கு கிடைத்த மனைவி சறோஜினி அக்காவைக் கூறத் தவறமாட்டார். "மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்" தம்பி அமிர்தம் உங்களுடைய அக்காவின் பொறுமையும் நற்குணமும் தான் நாங்கள் சந்தோஷமாக வாழக்காரணமென அடிக்கடி கூறுவார்.

அரசியல் தொடக்கம் கிராமத்திலுள்ள உறவினர்கள் ஊரவர்களின் சந்திப்புகள் உறவு முறைகள் மற்றும் விழுமியங்கள் எல்லா மிகுந்த ஞாபகத்துடன் ஒழுங்காக் கூறும் ஆற்றலுள்ளவர். எவருக்கும் தீமை செய்யாதவர். எது எவ்வாறிருப்பினும் யாராலும் மதிக்கத்தக்க பண்புள்ள ஓர் மனிதனாகவும் மிக்க அறிவாற்றலுள்ளவராகவும் வாழ்ந்தவரின் வாழ்க்கை முறை எமக்கெல்லாம் ஓர் முன்னுதாரணம் ஆகும். அவரது இடையறாத இறைபக்தியும் ஒழுக்கமான சீரியவாழ்வும் அவரை விசுவத்தனையான் பாதங்களில் இட்டுச் சென்றது என்பதில் ஐயமேதுமில்லை "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்- வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" அமரராகிவிட்ட அத்தான் அவர்களின் ஆத்மா பேரின்பத்தில் துய்த்திட பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் பாசமுள்ள

**ம. ஸ்ரீமுருகவேள் M. A. (J. P.)**

பண்ணாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதருள் மாணிக்கம்

## அமரர் திரு. இராமலிங்கம் தம்பையா

எங்கள் ஊர்ப்பெரியாரும், சமூக ஆர்வலருமான, சைவத்தையும், தமிழையும் வளர்ந்த திரு. இராமலிங்கம் தம்பையா அவர்களுடன் சென்ற இருபது ஆண்டுகளுக்கு முன் நெருங்கி பழகவேண்டி வாய்ப்பு. கிடைத்தது அவருக்கும் எனக்கும் ஏற்பட்ட நற்பு காரணமாக இருவரும் மனம் விட்டு கதைத்துப்பழகினோம்.

மிகவும் நல்ல இலச்சியங்களை கொண்ட நேர்மையான மனிதரும் ஆவார். இவர் வெள்ளை வேட்டியும் சேட்டும் அணிந்து மிகவும் கம்பீரமாக இருப்பார். இவர் தினமும் தனது கணக்குகளை எழுதி வாழ்ந்தார். "பாத்திரமறிந்து பிச்சை போடு" என்ற பழமொழிக்கு அமைவாக நடப்பார் நான் பொருட்களை கொள்வனவு செய்யும் பொழுது மிகவும் கறார் போலவிருப்பார் மற்றவர்களுடைய கஸ்ரத்தை பார்த்து பெரும் வெகுமாணியாக வாழ்ந்தார்.

சுற்றத்தார், அயலவர், மற்றும் எனக்கும் சமூக்துக்கும் பல வழிகளில் உதவியாகவும் வழிகாட்டியாகவும் வாழ்ந்தார். எமது கிராமம் பெருமைப்படக்கூடிய முறையில் தனது மூத்த புதல்வனை பொறியியல் பட்டதாரியாக்கி, பொறியியல் துறையில் "டாக்டர் பட்டம்" பெற ஜப்பான் நாட்டுக்கும் அனுப்பி வைத்தார். மகன்மார் இருவரும் சிங்கப்பூர், சுவிஸ் நாடுகளில் குடும்பத்துடன் வாழ்ந்து வருகின்றனர். மகளைத்தனது இனத்திலுள்ள பட்டதாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரானகண்ணதாசனுக்குத் திருமணம் செய்து வைத்து தனக்கு உதவியாக பேரப்பிள்ளைகளுடன் சந்தோஷமாக வாழ்ந்து வரும் பொழுது 92 ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

இவருடைய வாழ்க்கை உயர்வடைய இவருடைய சகோதரி செல்வி. இ. நேசம்மா மிகவும் உதவியாக இருந்தார் பிள்ளைகள் கல்வியில் நிறைந்து விளங்கவும் உறுதுணையாக வாழ்ந்து வருகிறார். இவருடன் அமரர் தம்பையா மிகவும் பாசமாக வாழ்ந்தார். இவருடைய மனைவி பத்தாவுக்கேற்ற பதிவிரதையாக வாழ்ந்து வருகின்றார். வீட்டுக்கு வருபவர்களை உபசரிப்பதில். சமத்தர் "மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்"

அவரை இழந்த அனைவரும் அவர் 92வது வயதில் இறந்ததையிட்டு மனவேதனைப்படுவதில் எந்த அர்த்தமும் இல்லை. அவர ஆத்மாசாந்தியடைய விசுவத்தனை முருகனை வேண்டுவோமரக.

ஓம் சாந்தி !!! ஓம் சாந்தி !!!

அன்புக்குரிய

**த. துரைலிங்கம்**

(ஓய்வுநிலை பொறியியலாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிகாமம் மேற்கு பிரதேச சபை
වලිකාමම් බටහිර ප්‍රාදේශීය සභාව
VALIKAMAM WEST PRADESHIYA SABHA
சுழிபுரம் චුලිපුරම් CHULIPURAM

உமது இல / Your No
எனது இல / My No: NP/14/41(17)/2/Gen/2022
ஈமெயில் / E-mail: valiwestps@gmail.com
திகதி / Date: 2022.03.02

# "இரங்கல் செய்தி"

எமது வலிகாமம் மேற்கு பிரதேச சபையில் வேலைப்பகுதியில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி.தங்கசொரூபி கண்ணதாசன் அவர்களின் அன்புத்தந்தையாரான அமரர் இராமலிங்கம் தம்பையா அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தியறிந்து அதிர்ச்சியடைந்து மனவருத்தம் அடைகின்றேன். பண்ணாகத்தை வதிவிடமாக கொண்ட அமரர் இராமலிங்கம் தம்பையா சமூகத்துடன் நல்லுறவைப் பேணி, குடும்ப வாழ்வில் தன் பொறுப்புணர்ந்து நல்ல எடுத்துக்காட்டான தந்தையாக தன் வாழ்வில் அன்பாகவும், பண்பாகவும் வாழ்ந்தவர். தனது பிள்ளைகளையும் சீரும் சிறப்புமாக வளர்த்து கல்விச்செல்வத்தை குறைவின்றி வழங்கி சிறப்புடன் வாழ வழிவகுத்தவர்.

"அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு ஐந்துசால் ஊன்றிய தூண்" என்ற வள்ளுவரின் (குறள் 983) வாக்கிற்கமைய வாழ்ந்து காட்டிய பெரியார் அமரர் இராமலிங்கம் தம்பையா அவர்களை வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளராக பதவியேற்ற காலப்பகுதியில் தமிழினத்தின் தலைவர், மறைந்த எமது கட்சியின் முன்னாள் தலைவர் அமரர் அமிர்தலிங்கம் அவர்களின் திருவுருவச் சிலை திறப்பு விழாவின் போது அறிமுகமாகி அவருடன் நெருங்கிப் பழக முடிந்தது.

சமூகத்திற்காக தன்னை அர்ப்பணித்த ஒரு மகானாக நான் அவரைப் பார்த்தேன். எளிமையுடன் எப்போதும் புன்சிரிப்புடன் எமக்கு அறிவுரைகள் கூறி எம்மை வழிகாட்டிய உத்தமர்.

கால ஓட்டத்தில் காலனவன் காலம் வந்துவிட்டதென 16.02.2022 அன்று அழைத்தமைக்கமைய இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் அவர் நேசித்த பண்ணாகம் வாழ் மக்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து எனது அஞ்சலியை சமர்ப்பிக்கின்றேன்.

**த.நடனேந்திரன்,**
தவிசாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னை கவர்ந்த பற்றாளன்
## அமரர் திரு இ. தம்பையா அவர்கள்

கனிவு நிறைந்த கண்கள், அன்பு ததும்பும் வார்த்தைகள், ஒரு முறை கதைத்தால் மீள மீள கதைக்க வேண்டும் போல் மற்றவர்களை ஈர்க்கும் அர்த்த உரையாடல்கள், பரந்த விசாலமான அறிவும் ஆழ்ந்த தமிழ் பற்றும், பல் மொழி வல்லுனர், மற்றவர்கள் மீதும் சரி தன் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் மீதும் சொரியும் அன்பின் அளவு இதை வெளிப்படுத்தும் விதமும் மிகவும் அழகானது.

தன் மகனின் உயர்வு, சிறப்பைப் பற்றி கதைக்கும் போது அவர் கண்களில் மின்னும் ஒளி அப்பப்பா!!! இத்தனைக்கும் சொந்தக்காரரான என் அப்பாவின் நீண்ட நாள் நண்பரான உங்களுடன் கதைக்கும் போது என் அப்பாவுடன் கதைப்பது போலிருக்கும். இப்பொழுது கூட உங்களுடன் கதைக்க விருப்பமாக உள்ளது. மீணடும் வருவீர்களா?

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வைத்திய கலாநிதி
**Dr. ஆ. காந்தநேசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படி நாம் மறப்போம்?.......

தன்னைப் போல சகலமும் ஓம்பி,
விண்ணைப் போல வியாபகமாகி,
கண்ணைப் போல அறத்தைக் (தர்மத்தைக்) காத்த
எங்கள் தம்பையா மாமாவின் நினைவு மலருக்கு
சொற்களால் எதையும் எழுதிவிட முடியாது.
எனினும் சில வரிகளால் சமர்ப்பணம் செய்கிறேன்!

எளிமையானவர், வெள்ளை வெளேரென்ற ஆடையுடன்
தனக்கென்று ஒரு புன்சிரிப்புடையவர்!
எங்கள் குடும்பத்தினர் அனைவருடனும் அதீத அன்பு காட்டியவர்!
நல்லதோ கெட்டதோ விரைந்து எமது வீட்டுக்கு துவிச்சக்கர வண்டியில் வந்து உதவிடுவார்!
எங்கள் தந்தையார் இறந்தபோது நானும் எனது சகோதரனும் ஊரில் இல்லை!
கடைசித் தம்பிதான் கடமை செய்தான்! செய்தி கேட்ட உடனேயே அன்றே இறுதிக்கிரியை நடத்திட முன்னின்றவர்களுள்
மிகமுக்கியமானவர்!
அப்படிப்பட்ட பெரியவரை - மகானை எப்படி நாம் மறப்போம்?
உயிருள்ளவரை என்றும் அவர் எமது நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டே இருப்பார்!

*"எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தம்கண்*
*விழுமம் துடைத்தவர் நட்பு"* (குறள் 107)

**தங்க. முகுந்தன்**
(மூளாய்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

**திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பாடியருளிய**

# கோளறு பதிகம்

**[சிவனடியாரை நாளும் கோளும் மொன்றுஞ் செய்யா என்று பிள்ளையார் அப்பருக்கு கூறிய போது பாடியது]**

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம்பு இரண்டும் உடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 01

என்பொடு கொம்பொடாமை இவைமார்பு இலங்க
எருதேறி ஏழை உடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பது ஒன்றொடுஏழு பதினெட்டொடு ஆறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 02

உருவளர் பவளமேனி ஒளி நீறணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசை தெய்வமான பலவும்
அருநெதி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 03

மதிநுதன் மங்கையோடு வடபால் இருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன்அங்கி நமனோடு தூதர்
கொடு நோய்களான பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஞ்சணி கண்டன்எந்தை மடவாள் தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடு உருமிடியும் மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே 05

வாள்வரிய தளதாடை வரி கோவணத்தர்
மடவாள் தனோடு உடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடு நாகமோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே 06

செப்பிள முலைநன்மங்கை ஒரு பாகமாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும்அப்பும் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே 07

வேள்பட விழிசெய்துஅன்று விடைமேல் இருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ்இலங்கை அரையன் றனோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமகளோடு எருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசையோன் மால் மறையோடு தேவர்
வரு காலமான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே 09

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரோடு அமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே 10

தேனமர் பொழில்கொள்ஆலை விளைசெந்நெல்துன்னி
வளர்செம்பொன் எங்கும் திகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளுநாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே!! 11

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## அபிராமிப்பட்டர் அருளிய

# அபிராமி அந்தாதி

### காப்பு

தாரமர் கொன்றையும் சண்பக மாலையுஞ் சாத்துந்தில்லை
ஊரர்தம் பாகத் துமைமைந்த னேயுல கேழும்பெற்ற
சீரபி ராமியந் தாதியெப் போதுமென் சிந்தையுள்ளே
காரமர் மெனிக் கணபதியே நிற்கக் கட்டுரையே.

### நூல்

உதிக்கின்ற செய்கதி ருச்சித் திலக முணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் பொது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி யபிராமி யென்றன் விழுத்துணையே. 1

துணையுந் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயும் சுருதிகளின்
பணையுங் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையுங் கருப்புச் சிலையுமென் பாசாங் குசமுங்கையில்
அணையுந் திரிபுர சுந்தரி யாவ தறிந்தனமே. 2

அறிந்தே னெவரு மறியா மறையை யறிந்துகொண்டு
செறிந்தே னுனது திருவடிக் கேதிரு வேவெருவிப்
பிறந்தேன்றின் னன்பர் பெருமையெண்ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழுநர குக்குறவாய மனிதரையே. 3

மனிதருந் தேவரு மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதருஞ் சேவடிக் கோமள மேகொன்றை வார்சடைமேற்
பனிதருந் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரு நீயுமென் புந்தியெந் நாளும் பொருந்துகவே. 4

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையாள்
வருந்திய வஞ்சி மருங்குன் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்சமு தாக்கிய வம்பிகை யம்புயமேற்
திருந்திய சுந்தரி யந்தரி பாதமென் சென்னியதே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னிய துன்பொற் றிருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னிய துன்றிரு மந்திரஞ் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நினன்டி யாருடன் கூடி முறைமுறையே
பன்னிய தென்றுமுன் றன்பர மாகம பத்ததியே. 6

ததியுறு மத்திற் சுழலுமென் னாவி தளர்விலதோர்
கதியுறு வண்ணங் கருதுகண் டாய்கம லாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனு மாலும் வணங்கியென்றுந்
துதியுறு சேவடி யாய்சிந்து ரானன சுந்தரியே. 7

சுந்தரி யெந்தை துணைவியென் பாசத்தொடரையெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தி னாண்மகி டன்றலைமே
லந்தரி நீலி யழியாத கன்னிகை யாரணத்தோன்
சுந்தரி கைத்தலத் தாள்மலர்த் தாளென் கருத்தனவே. 8

கருத்தன வெந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பாலழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தல பாரமு மாரமுஞ் செங்கைச் சிலையுமம்பும்
முருத்தன மூரலு நீயுமம் மேவந்தென் முன்னிற்கவே. 9

நின்று மிருந்துங் கிடந்து நடந்து நினைப்பதுன்னை
என்றும் வணங்குவ துன்மலர்த் தாளெழு தாமறையி
னொன்று மரும்பொரு ளெயரு ளேயுமை யேயிமயத்
தன்றும் பிறந்தவ ளேயழி யாமுத்தி யானந்தமே. 10

ஆனந்த மாயென் னறிவாய் நிறைந்த வமுதமுமாய்
வானந்த மான வடிவுடை யாண்மறை நான்கினுக்குந்
தானந்த மான சரணார விந்தத் தவளநிறக்
கானந்த மாடரங் காமெம்பி ரான்முடிக் கண்ணியதே. 11

கண்ணிய துன்புகழ் கற்பதுன் னாமங் கசிந்துபத்தி
பண்ணிய துன்னிரு பாதாம் புயத்தில் பகலிரவா
நண்ணிய துன்னை நயந்தோ ரவையத்து நான்முன்செய்த
புண்ணிய மேதென்னம் மேபுவி யேழையும் பூத்தவளே. 12

பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணங்
காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேயென்று மூவா முகுந்தற் கிளையவளே
மாத்தவ ளேயுன்னை யன்றிமற் றோர்தெய்வம் வந்திப்பதே. 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திப் பவருன்னை வானவர் தானவ ரானவர்கள்
சிந்திப் பவர்நற் றிசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பரநதிப் பவரழி யாப்பர மானந்தர் பாரிலுன்னைச்
சந்திப் பவர்கெளி தாமெம்பி ராட்டிநின் றண்ணளியே. 14

தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள் செய்வார்
மண்ணளிக் குருஞ்செல்வ மோபெறு வார்மதி வானவர்தம்
விண்ணளிக் குருஞ்செல் வமுமழி யாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக் குஞ்சொற் பரிமள யாமளைப் பைங்கிளியே. 15

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரு
மொளியே யொளிரு மொளிக்கிட மேயெண்ணி லொன்றுமில்லா
வெளியே வெளிமுதற் பூதங்க ளாகி விருந்தவம்மே
அளியே னறிவள விற்கள வான ததிசயமே. 16

அதிசயமான வடிவுரை யாளர விந்தமெல்லாந்
துதிசய வானன சுந்தர வல்லி துணையிரதி
பதிசய மான தபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகவன் றோவாம பாகத்தை வவ்வியதே. 17

வவ்விய பாகத் திறைவரு நீயும் மகிழ்ந்திருக்குஞ்
செவ்வியு முங்க டிருமணக் கோலமுஞ் சிந்தையுள்ளே
அவ்வியந் தீர்த்தென்னை யாண்டபொற் பாதமு மாகிவந்து
வெவ்விய காலனென் மேல்வரும் போது வெளிநிற்கவே. 18

வெளிநின்ற மேனியைப் பார்த்தென் விழியுநெஞ்சுங்
களிநின்ற வெள்ளங் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானந் திகழ்கின்ற தென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்க ளொன்பது மேவி யுறைபவளே. 19

உறைகின்ற நின்றிருக் கோயிலின் கேள்வ ரொருபக்கமோ
அறைகின்ற நான்மறை யின்னடி யோமுடி யோவமுத
நிறைகின்ற வெண்டிங்க ளோகஞ்ச மோயென்ற னெஞ்சகமோ
மறைகின்ற வாரிதி யோபூர ணாசல மங்கலையே. 20

மங்கலை செங்கல சம்முலை யாள்மலை யாள்வருணச்
சங்கலை செங்கலைச் சகலகலாமயி றாவுங்கை
பொங்கலை தங்கும் புரிசடை யோன்புடை யாளுடையாள்
பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள்பசும் பெண்கொடியே. 21



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடியே இளவஞ்சிக் கொம்பே யெனக்குவம் பேபழுத்த
படியே மறையின் பரிமள மேபனி மாலிமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்றவம்மே
அடியே னிறந்திங் கனிப்பிற வாமல்வந் தாண்டுகொள்ளே. 22

கொள்ளேன் மனத்தினின் கோலமல் லாதன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன் பரசம யம்விரும் பேன்வியன் மூவுலகுக்
குள்ளே யனைத்தினுக் கும்புறம் பேயுள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்குங் களியே யளியவென் கண்மணியே. 23

மணியே மணியி னொளியே யொளிரு மணிபுனைந்த
அணியே யணியு மணிக்கழ கேயணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே யமரர் பெருவிருந்தே
பணியே னொருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே. 24

பின்னே திரிந்துன் னடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண் டேன்முதல் மூவருக்கும்
அன்னே யுலகுக் கபிராமி யென்னு மருமருந்தே
என்னே யினியுன்னை யான்மறை வாமனின் றேத்துவனே. 25

ஏத்து மடியவ ரீரே ழுலகினை யும்படைத்துங்
காத்து மழித்துந் திரிபவ ராங்கமழ் பூங்கடம்பு
சாத்துங் குழலணங் கேமண நாறுநின் றாளிணைக்கென்
நாத்தங்கு புன்மொழி யேறிய வாறு நகையுடைத்தே. 26

உடைத்தனை வஞ்சப் பிறவியை யுள்ள முருகுமன்பு
படைத்தனை பத்ம பதயுகஞ் சூடும் பணியெனக்கே
அடைத்தனை நெஞ்சத் தழுக்கையெல் லாநின் னருட்புனலாற்
றுடைத்தனை சுந்தரி நின்னருளே தென்று சொல்லுவதே. 27

சொல்லும் பொருளு மெனநட மாடுந் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதமலர்த்தாள்
அல்லும் பகலுந் தொழுமவர்க் கேயழி யாவரசுஞ்
செல்லுந் தவநெறி யுஞ்சிவ லோகமுஞ் சித்திக்குமே. 28

சித்தியுஞ் சித்தி தருந்தெய்வ மாகித் திகழும்பரா
சத்தியுஞ் சத்தி தழைக்குஞ் சிவமுந் தவமுயல்வார்
முத்தியு முத்திக்குக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியு னுள்ளே புரக்கும் புரத்தையன்றே. 29



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றே தடுத்தென்னை யாண்டுகொண்டு டாய்கொண்ட தல்லவென்கை
நன்றே யுனக்கினி நாளென் செயினு நடுக்கடலுட்
சென்றே விழினுங் தரையேற் றகைநின் றிருவுளமே
ஒன்றே பலவுரு வேயரு வேயென் னுமையவளே. 30

உமையு முமையொரு பாகரு மேக வுரவில் வந்திங்
கெமையுந் தமக்கன்பு செய்யவைத் தாரினி யெண்ணுதற்குச்
சமையங் களுமில்லை யீன்றெடுப் பாளொரு தாயுமில்லை
யமையு மமையுறு தோளியர் மேல்வைத்த வாசையுமே. 31

ஆசைக் கடலி லகப்பட் டருளற்ற வந்தகன்கைப்
பாசத்தி லல்லற் படவிருந் தேனைநின் பாதமென்னும்
வாசக் கமலந் தலைமேல் வலியவைத் தாண்டுகொண்ட
நேசத்தை யென்சொல்லு வேனீசர் பாகத்து நேரிழையே. 32

இழைக்கும் வினைவழி யேயடுங் கால னெனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந் தஞ்சலென் பாயத்தர் சித்தமெல்லங்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே
உழைக்கும் பொழுதுன்னையேயன்னை மேயயென்ப னோடிவந்தே. 33

வந்தே சரணம் புகுமடி யாருக்கு வானுலகந்
தந்தே பரிவொடு தான்போ யிருக்குஞ் சதுர்முகமும்
பைந்தே னலங்கற் பருமணி யாகமும் பாகமும்பொற்
செந்தேன் மலருமலர்கதிர் ஞாயிந் திங்களுமே. 34

திங்கட் பகவின் மணநாறுஞ் சீறடி சென்னிவைக்க
எங்கட் கொருதவ மெய்திய வாவெண் ணிறந்த விண்ணோர்
தங்கட்கு மிந்தத் தவமெய்து மோதரங் கக்கடலுள்
வெங்கட் பணியணை மேற்றுயில் கூரும் விழும்பொருளே. 35

பொருளே பொருண்முடிக் கும்போக மேயரும் போகஞ்செய்யு
மருளே மருளில் வந்தொரு ளேயென் மனத்துவஞ்சத்
திருளேது மின்றி யொளிவெளி யாகி யிருக்குமன்றன்
அருளே தறிகின்றி லேனம்பு யாதனத் தம்பிகையே. 36

கைக்கே யணிவது கன்னலும் பூவும் கமலமன்ன
மெய்க்கே யணிவது வெண்முத்து மாலை விடவரவின்
பைக்கே யணிவது பன்மணிக் கோவையும் பட்டுமெட்டுத்
திக்கே யணியுந் திருவுடை யானிடஞ் சேர்ப்பவளே. 37



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவளக் கொடியிற் பழுத்தசெவ் வாயும் பனிமுறுவற்
றவளத் திருநகை யுந்துணை யாவெங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்குந் துணைமுலையாள்
அவளைப் பணிமின்கண் டீரம ராவதி யாளுகைக்கே. 38

ஆளுகைக் குன்ற னடித்தா மரைகளுண் டந்தகன்பான்
மீளுகைக் குன்றன் விழியின் கடையுண்டு மேலிவற்றின்
மூளுகைக் கென்குறை நின்குறை யேயன்று முப்புரங்கள்
மாளுகைக் கம்பு தொடுத்தவில் லான்பாங்கில் வாணுதலே. 39

வாணுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற் கெண்ணிய வெம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்சிற்
காணுதற் கண்ணிய ளல்லாத கன்னியைக் காணுமன்பு
பூணுதற் கெண்ணிய வெண்ணமன் றோமுன் செய்புண்ணியமே. 40

புண்ணியஞ் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியுஞ் செய்ய கணவருங் கூடிநங் காரணத்தால்
நண்ணியிங் கேவந்து தம்மடி யார்கள் நடுவிருக்கப்
பண்ணிநம் சென்னியின் மேற்பத்ம பாதம் பதித்திடவே. 41

இடங்கொண்டு விம்மி யிணைகொண் றுகி யிளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொ் டிறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட வல்குற் பனிமொழி வேதப் பரிபுரையே. 42

பரிபுரச் சீறடிப் பாசாங் குசைபஞ்ச பாணியின்சொல்
திரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீமைநெஞ்சிற்
பரிபுர வஞ்சரை யஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை
எரிபுரை மேனி யிறைவர்செம் பாகத் திருந்தவளே. 43

தவளே யிவளெங்கள் சங்கர னார்மனை மங்கலமாம்
அவளே யவர்தமக் கன்னையு மாயின ளாகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கு மேலை யிறைவியுமாந்
துவளே னினியொரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டுசெய்தே. 44

தொண்டுசெய் யாதுநின் பாதந் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தாருள ரோவில ரோவப் பரிசடியேன்
கண்டுசெய் தாலது கைதவ மேவன்றிச் செய்தவமோ
மிண்டுசெய்தாலும் பொறுக்கைநன்றேபின் வெறுக்கையன்றே. 45



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுக்குந் தகைமைகள் செய்யினுந் தம்மடி யாரைமிக்கோர்
பொறுக்குந் தகைமை புதியதன் றேபுது நஞ்சையுண்டு
கறுக்குந் திருமிடற் றானிடப் பாகங் கலந்தபொன்னே
மறுக்குந் தகைமைகள் செய்யினும் யானுன்னை வாழ்த்துவனே. 46

வாழும் படியொன்று கண்டுகொண் டேன்மனத் தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை யெட்டுமெட் டாமல் விரவுபகற்
குழுஞ் சடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே. 47

சுடரும் கலைமதி துன்றுஞ் சடைமுடிக் குன்றிலொன்றிப்
படரும் மரிமளப் பச்சைக் கொடியைப் பதித்துநெஞ்சி
இடருந் தவிர்த்திமைப் போதிருப் பார்பின்னு மெய்துவரோ
குருடந் கொழுவுங் குருதியுந் தோயுங் குரம்பையிலே. 48

குரம்பை யடுத்துக் குடிபுக்க வாவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை யடுத்து மறுகுமப் போது வளைக்கையமைத்து
அரம்பை யடுத்த வரிவையர் சூழவந் தஞ்சலென்பாய்
நரம்பை யடுத்த இசைவாடிவாய்நின்ற நாயகியே. 49

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமனை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கியென்
றாயகி யாதி யுடையாள் சரணம் அரண்ணமக்கே. 50

அரணம் பொருளென் றருளொன் றிலாத வசுரர்தங்கண்
முரணன் றழிய முனிந்தபெம் மானு முகந்தனுமே
சரணஞ் சரண மெனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி யிரண்டுமெய் தாரிந்த வையகத்தே. 51

வையந் துரக மதகரி மாமகு டஞ்சிவிகை
பெய்யுங் கனகம் பெருவிலை யாரம் பிறைமுடித்த
வையன் யிருமனை யாளடித் தாமரைக் கன்புமுன்பு
செய்யுந் தவமுடை யார்க்குள வாகிய சின்னங்களே. 52

சின்னஞ் சிறிய மருங்கினிற் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையுமுந் தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலுங்கண் மூன்றுங் கருத்தில் வைத்துத்
தன்னந் தனியிருப் பார்க்கிது போலுந் தவமில்லையே. 53



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமை சொல்லி யொருவர்தம் பாற்சென் றிழிவுபட்டு
நில்லாமை நெஞ்சி னினைகுவி ரேனித்த நீடுதவங்
கல்லாமை கற்ற கயவர்தம் பாலொரு காலத்திலுஞ்
செல்லாமை வைத்த திரிபுடை பாதங்கள் சேர்மின்களே. 54

மின்னா யிரமொரு மெய்வடிவாகி விளங்குகின்ற
தன்னா ளகமகி ழானந்த வல்லி யருமறைக்கு
முன்னாய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்விதன்னை
உன்னா தொழியினு முன்னினும் வேண்டுவ தொன்றிலையே. 55

ஒன்றா யரும்பிப் பலவாய் விரிந்திவ் வுலகெங்குமாய்
நின்றா ளனைத்தையு நீங்கிநிற் பாளென்ற னெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்ற வாவிப் பொருளறிவார்
அன்றா லிலையிற் றுயின்றபெம மானுமென் னையனுமே. 56

ஐய ளைந்த படியிரு நாளிகொண்ட டண்டமெல்லாம்
உய்ய வறஞ்செபு முன்னையும் போற்றி யொருவர்தம்பாற்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலை யுங்கொண்டு சென்றுபொய்யு
மெய்யு மியம்பவைத் தாயிது வோவுண்றன் மெய்யருளே. 57

அருணாம் புயத்துமென் சித்தாம் புயத்து மமர்ந்திருக்குந்
தருணாம் புயமுலைத் தையனல் லாடகை சேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமுங் கராம்புயமுஞ்
சரணாம்' புயமுமல் லாக்டி லேனொரு தஞ்சமுமே. '58

தஞ்சம் பிறிதில்லை யீதல்ல் தென்றுன் றவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றி லேனொற்றை நீள்சிலையு
மஞ்சம்பு மிக்கல ராகநின் றாயறி யாரெனினும்
பஞ்சு மெல்லடி யாரடி யார்பெற்ற பாலரையே. 59

பாலினுஞ் சொல்லினி யாய்பனி மாமலர்ப் பாதம்வைக்க
மாலினுந் தேவர் வணங்கநின் றொன்கொன்றை வார்சடையின்
மேலினுங் கீழ்நின்று வேதங்கள் பாடுமெய்ப் பீடமொரு
நாலினுஞ் சாலநன் றோவடி யேன்முடை நாய்த்தலையே. 60

நாயே னையுமிங் கொருபொரு ளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி யாண்டுகொண் டாய்நின்னை யுள்ளவண்ணம்
பேயே னறிவு மறிவுதந் தாயென்ன பேறுபெற்றேன்
தாயே மலமக ளேசெய்கண் மால் திருத்தங்கச்சியே. 61



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரஞ் சாய்த்துமத
வெங்கட் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரம்பைக் குறியிட்ட நாயகி கோகனச்
செங்கைக் கரும்பு மலருமெப் போதுமென் சிந்தையதே. 62

தேறும் படிசில வேதுவுங் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள்இன்றில் கொட்டுந் தறிகுறிக் குஞ்சமையம்
ஆறந் தலைவி யிவளா யிருப்ப தறிந்திருந்தும்
வேறுஞ் சமயமுண் டென்றுகொண் டாடிய வீணருக்கே. 63

வீணை பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்கவன்பு
பூணே னுனக்கன்பு பூண்டுகொண் டேனின் புகழ்ச்சியன்றிப்
பேணே னொருபொழு துந்திரு மேனிப்ர காசமன்றிக்
காணே னிருநில முந்திசை நான்குங் ககனமுமே. 64

ககனமும் வானும் புவனமும் காணவிற் காமனங்கந்
தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையுஞ்செம்
முகனுமுந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுண் டாயதன் றோவல்லி நீசெய்த வல்லபமே. 65

வல்லப மொன்றறி யேன்சிறி யேனின் மலரடிச்செம்
பல்லவ மல்லது பற்றொன் றிலேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்றொடுத்த
சொல்லவ மாயினு நின்றிருந் நாமங்க டோத்திலமே. 66

தோத்திரஞ் செய்து தொழுமின் போலுநின் றோற்றமொரு
மாத்திரைப் போது மனதில்வை யாதவர் வண்மைகுலங்
கோத்திரங் கல்வி குணங்குன்றி நாளுங் குடில்கடோறும்
பாத்திரங் கொண்டு பலிக்கழ லாநிற்பர் பாரெங்குமே. 67

பாரும் புனலுங் கனலும்வெங் காலும் படர்விசும்பும்
ஊரு முருகு சுவையொளி யூறொலி யொன்றுபடச்
சேருந் தலைவி சிவகாம சுந்தரி சீறடிக்கே
சாருந் தவமுடைய யார்படை யாத தனமில்லையே. 68

தனந்தருங் கல்வி தருமொரு நாயுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந் தருநெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தருந் நல்லன வெல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாளபி ராமி கடைக்கண்களே. 69



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியிற்
பண்களிக் குங்குரல் வீணையுங் கையும் பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ணமு மாகி மதங்கர்குலப்
பெண்களிற் றோன்றிய வெம்பெரு மாட்டிதன் பேரழகே. 70

அழகுக் கொருவரு மொவ்வாத வல்லி யருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பனி மாமதியின்
குளவித் திருமுடிக் கோமள யாமளைகை கொம்பிருக்க
இழவுற்று நின்றநெஞ் செயிரங் கேலுனக் கென்குறையே. 71

என்குறை தீரநின் றேத்துகின் றேனினி யான்பிறக்கின்
நின்குறை யேயன்றி யார்குறை காணிரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீரவெங் கோன்சடை மேல்வைத்த தாமரையே. 72

தாமங் கடம்பு படைபஞ்ச பாணம் தனுக்கரும்பி
யாமம் வயிரவ ரேத்தும் பொழுதெமக் கென்றுவைத்த
சேமந் திருவடி செங்கைக னான்கொளி செம்மையம்மை
நாமந் திரிபுடை யொன்றோ டிரண்டு நயனங்களே. 73

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமு நாரணனும்
அயனும் பரவு மபிராம வல்லி யடியிணையைப்
பயனென்று கொண்டவர் பாவைய ராடவும் பாடவும்பொற்
சயனம் பொருந்து தபனியக் காவினிற் றங்குவரே. 74

தங்குவர் கற்பக தாருவின் னீழலிற் றாயரின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவ ராழியு மீரேழ் புவனமும் பூத்தவுந்திக்
கொங்கிவர் பூங்குழ லாடிரு மேனி குறித்தவரே. 75

குறித்தேன் மனத்தினின் கோலமெல் லாநின் குறிப்பறிந்து
மறித்தேன் மறி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தே னவிழ்கொன்றை வேணிப் பிரானொரு கூற்றை மெய்யிற்
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பயிரவியே. 76

பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ் சபாணிவஞ்ச
ருயிரவி யுண்ணு முயர்சண்டி காளி யொளிருங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நானமறை சேர்திரு நாமங்கள் செப்புவரே. 77



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பங் கனக கலசமும் போலுந் திருமுலையே
அப்புங் களப வபிராம வல்லி யணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையுந்
துப்பும் நிலவு மெழுதிவைத் தேனேன் றுணைவிழிக்கே. 78

விழக்கே யருண்ட டபிராம வல்லிக்கு வேதஞ்சொன்ன
விழக்கே வழிபட நெஞ்சுண் டெமக்கவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நகரகக்
குழிக்கே யழுந்துங் கயவர்தம் மோடென்ன கூட்டினியே. 79

கூட்டிய வாவென்னைத் தன்னடி யாரிற் கொடியவினை
போட்டிய வாவென்க ணோடிய வாதன்னை யுள்ளவண்ணம்
காட்டிய வாகண்ட கண்ணு மனமுங் களிக்கின்றவா
ஆட்டிய வாநட மாடகத் தாமரை யாரணங்கே. 80

அணங்கே யணங்குக ணின்பரி வாரங்க ளாகையினால்
வணங்கே னொருவரை வாழ்த்துகி லேனெஞ்சில் வஞ்சகரோ (டு)
இணங்கே னெனதுன தென்றிருப் பார்சிலர் யாவரொடும்
பிணங்கே னறிவொன்றி லேனென்க ணீவைத்த பேரொளியே. 81

அளியார் கமலத்தி லாரணங் கேயகி லாண்டமும்நின்
ஒளியாக நின்ற வொளிர்திரு மேனியை வஞ்சகரோ
களியாகி யந்தக் கரணணங்கள்விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடினெங்க ளேமறப் பெனின் விரகினையே. 82

விரவும் புதமல ரிட்டுநின் பாத விரைக்கமல
மிரவும் பகலுமிறைஞ்சவல் லாரிமை யொரெவரும்
பரவும் பதமு மயிரா வதமும் பகீரதியும்
உதவுங் குலிசமுங் கற்பகக் காவு முடையவரே. 83

உடையாளை யொல்கு செம்பட் டுடையாளை யொழிர்மதிச்செஞ்
சடையொனை வஞ்சகர் நெஞ்சடை யாளைத் தயங்குநண்ணூல்
இடையாளை யெங்கள்பெம் மானிடையாளையிங் கென்னையினிப்
படையாளை யுங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே. 84

பார்க்குந் திசைதொறும் பாசாங் குசமும் பனிச்சிறைவன்
டார்க்கும் புதுமல ரைந்துங் கரும்புமென் னல்லலெல்லாம்
தீர்க்குந் திரிபுரை யாழ்திரு மேனியுஞ் சிற்றியடையும்
வார்க்குங் குமமுலை யும்முலை மேல்முத்து மாலையுமே. 85



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலயன் தேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையுஞ் சூடகக் கையையுங் கொண்டு கதித்தகப்பு
வேலைவெங் காலனென் மேல்விடும்போது வெளிநில்கண்டாய்
பாலையுந் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே. 86

மொழிக்கு நினைவுககு மெட்டாத நின்நிரு மூர்த்தியென்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தால்வழி யால்மதனை
அழிக்குந் தலைவ ரழியா விரதத்தை யண்டமெல்லாம்
பழிக்கும் படியொரு பாகங்கொண் டாளும் பராபரையே. 87

பரமென் றுனையடைந் தேன்றமி யேனுமுன் பக்தருக்குள்
தரமன் றிவரென்று தள்ளத் தகாது தரியலர்தம்
புரமன் றெரியப் பொருப்புவில் வாங்கிய போதிலயன்
சிரமொன்று செற்றகை யானிடப் பாகஞ் சிறந்தவளே. 88

சிறக்கும் கமலத் திருவேநின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கந் தருநின் றுணைவரு நீயுந் துரியமற்ற
உறக்கந் தரவந் துடம்போ டுயருற வற்றறிவு
மறக்கும் பொழுதென்முன் னேவரல் வேண்டும் வருந்தியுயே. 89

வருந்தா வகையென் மனத்தா மரையினில் வந்துபுகுந்
திருந்தாள் பழைய விருப்பிட மாக வினியெனக்குப்
பொருந்தா தொருபொரு ளில்லைவிண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தா னதைநல்கு மெல்லியலே. 90

மெல்லிய நுண்ணிடை மின்னனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலைக் பொன்னனை யானைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணந் தொழுமடி யாரைத் தொழமவார்க்குப்
பல்லிய மார்த்தெழ வெண்பக டூரும் பதந்தருமே. 91

பதத்தே யுரிகிநின் பாதத்தி லேமனம் பற்றியுன்றன்
இதத்தே யொழுக வடிமைகொண் டாயினி யானொருவர்
மதத்தே மதியமயங் கேனவர் போன வழியுஞ்செல்லேன்
முதற்றேவர் மூவரும்யாவரும் போற்று முகிழ்நகையே. 92

நகையே யிஃதிந்த ஞாலமெல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுக் முடிவிலந்த
வகையே பிறவியும் வம்பே மலைமக ளென்பதுநாம்
மிகையே யிவடன் றகைமையை நாடி விரும்புவதே. 93



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பித் தொழுமடி யார்விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய வானந்த மாகி யறிவிழந்து
சுரும்பிற் கழித்து மொழிதடு மாறிமுன் சொன்னவெல்லாந்
தரும்பித்த ராவரென் றாலாபி ராமி சமயநன்றே. 94

நன்றே வருகினுந் தீதே விளைகினும் நானறிவ
தொன்றேயு மில்லை யுனக்கே பரமெனக் குள்ளவெல்லாம்
அன்றே யுனதென் றழித்துவிட் டேனழி யாதகுணக்
குன்றே யருட்கட லேயிம வான்பெற்ற கோமளமே. 95

கோமள வல்லியை யல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை யேதம் லாளை யெழுதரிய
சாமள மேனிச் சகல கலாமயி றன்னைத்தம்மால்
ஆமள வுந்தொழு வாரெழு பாருக்கு மாதிபரே. 96

ஆதித்த னம்புலி யங்கி குபேர னமரர்தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதற்
சாதித்த புண்ணிய ரெண்ணிலர் போற்றுவர் தையலையே. 97

தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயுந் தலைவந்த வாறுங் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சினல் லாலொரு காலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சிற் புகவழி யாமடப் பூங்குயிலே. 98

குயிலா யிருக்குங் கடம்மா டவியிடைக் பொலவியன்
மயிலா யிருக்கு மிமயா சலத்திடை வந்துதித்த
வெயிலா யிருக்கும் விசும்பிற கமலத்தின் மீதன்னமாங்
கயிலாய ருக்கன் றிமவா னளித்த கனங்குழையே. 99

குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளுங் கருப்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையும்
உழையப் பொருகண்ணு நெஞ்சிலெப் போது முதிக்கின்றனவே. 100

**நூற் பயன்**

ஆத்தாளை யெங்க ளபிராம வல்லியை யண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவியடங்க
காத்தாளை யங்குச பாசாங் குசமுங் கரும்பமங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு வார்க்கொரு தீங்கில்லையே.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்த

# சகல கலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன் றிநின் பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோ சகமேழுமளித்
துண்டா னுறங்க வொழித் தான்பித்
தாகவுண்டாக்கும் வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட றூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர் செந்நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழிதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோமதிமப் பேடே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற் பனமு மவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பினுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருநீற்றுப் பதிகம்

திருவாலவாய்

பண்: பியந்தைக் காந்தாரம் இராகம்: நவரோசு

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திரு ஆலயவாய திருநீறே

வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப்புலன் வயல் சூழ்ந்த திருஆலய வாயான் திருநீறே

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே 3

காண இனியது நீறு கவினைத் தருவது நீ
பேணி அணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணத் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருஆல வாயான் திருநீறே 4

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந் தவத்தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆல வாயான் திருநீறே 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருத்த மதாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால் வாயான் திருநீறே 6

எயிலது வட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தமதாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தாலவா யான் திருநீறே 7

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவணமாவது நீறு தத்துவமாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆலவாயான் திருநீறே 8

மாலொடு அயனறியாத வண்ணமும் உள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பம் தருவது நீறு
ஆலமு துண்ட மிடற்றெம் ஆலவாயான் திருநீறே 9

குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா ஏத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்தும் ஆலவாயான் திருநீறே.10

ஆற்றல் அடல்விடை ஏறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித் தென்னன் உடலுற்ற தீப்பிணி யாயின தீர
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.11

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருஷ்ண நாமம்

ஓம் ஸ்ரீ ஹரயே நமஹ
ஓம் ஸ்ரீ கேசவாய நமஹ
ஓம் ஸ்ரீ பத்மனாபாய நமஹ
ஓம் ஸ்ரீ வாமனாய நமஹ
ஓம் ஸ்ரீ வேதகர்ப்பாய நமஹ
ஓம் ஸ்ரீ மதுஸுதனாய நமஹ
ஓம் ஸ்ரீ வாஸுதேவாய நமஹ
ஓம் ஸ்ரீ வராஹாய நமஹ
ஓம் ஸ்ரீ புண்டரீகாட்சாய நமஹ
ஓம் ஸ்ரீ ஜனார்த்தனாய நமஹ
ஓம் ஸ்ரீ கிருஷ்ணாய நமஹ
ஓம் ஸ்ரீதராய நமஹ

"த்வாசம் என்றால் பன்னிரண்டு என்று பொருள். அந்தப் பன்னிரண்டு நாமங்கள்தான் மேலே தரப்பட்டுள்ளன. இந் நாமங்களை விஸ்வே மஹரிஷிகளுக்கு வைகுண்டத்தில் உபதேசித்ததாக ஸ்ரீமத் பாகவதம் கூறுகிறது. இதனைக் காலை மாலை ஜபிப்பவர்க்குச் சகல சௌபாக்கியங்களும் ஏற்படும் என்பது சாஸ்திரப் பிரமாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாலட்சமி அட்டோத்திர சதமும் ஸ்தோத்திரமும்

01. ஓம் ஆதி லட்சுமி போற்றி
02. ஓம் அதிஸ்ட லட்சுமி போற்றி
03. ஓம் வீர லட்சுமி போற்றி
04. ஓம் சந்தான லட்சுமி போற்றி
05. ஓம் ஐஸ்வரிய லட்சுமி போற்றி
06. ஓம் விசய லட்சுமி போற்றி
07. ஓம் தானிய லட்சுமி போற்றி
08. ஓம் மகா லட்சுமி போற்றி
09. ஓம் ஜெய லட்சுமி போற்றி
10. ஓம் தன லட்சுமி போற்றி
11. ஓம் ரதி லட்சுமி போற்றி
12. ஓம் சத்திய லட்சுமி போற்றி
13. ஓம் தா்ம லட்சுமி போற்றி
14. ஓம் அன்ன லட்சுமி போற்றி
15. ஓம் அழகு லட்சுமி போற்றி
16. ஓம் வசீகர லட்சுமி போற்றி
17. ஓம் கனக லட்சுமி போற்றி
18. ஓம் புவன லட்சுமி போற்றி
19. ஓம் அலங்கார லட்சுமி போற்றி
20. ஓம் வதனா லட்சுமி போற்றி
21. ஓம் மாயா லட்சுமி போற்றி
22. ஓம் அபூா்வ லட்சுமி போற்றி
23. ஓம் லலிதா லட்சுமி போற்றி
24. ஓம் பிரதிபா லட்சுமி போற்றி
25. ஓம் கல்யாண லட்சுமி போற்றி
26. ஓம் கௌாி லட்சுமி போற்றி
27. ஓம் பலராம லட்சுமி போற்றி
28. ஓம் பரசுராம லட்சுமி போற்றி
29. ஓம் சீதா லட்சுமி போற்றி
30. ஓம் கோபால லட்சுமி போற்றி
31. ஓம் கோதண்ட லட்சுமி போற்றி
32. ஓம் நாாி லட்சுமி போற்றி
33. ஓம் பாாிசாத லட்சுமி போற்றி
34. ஓம் காமதேனு லட்சுமி போற்றி
35. ஓம் கற்பக லட்சுமி போற்றி
36. ஓம் அபிராமி லட்சுமி போற்றி
37. ஓம் சா்வலோக லட்சுமி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38. ஓம் வரத லட்சுமி போற்றி
39. ஓம் வல்லப லட்சுமி போற்றி
40. ஓம் பத்ம லட்சுமி போற்றி
41. ஓம் அனுசா லட்சுமி போற்றி
42. ஓம் கிருஷ்ண லட்சுமி போற்றி
43. ஓம் இரத்தின லட்சுமி போற்றி
44. ஓம் இராச லட்சுமி போற்றி
45. ஓம் தமயந்தி லட்சுமி போற்றி
46. ஓம் நாளாயினி லட்சுமி போற்றி
47. ஓம் அருந்ததி லட்சுமி போற்றி
48. ஓம் காம லட்சுமி போற்றி
49. ஓம் மோக லட்சுமி போற்றி
50. ஓம் கங்கா லட்சுமி போற்றி
51. ஓம் ஜமுனா லட்சுமி போற்றி
52. ஓம் தைரிய லட்சுமி போற்றி
53. ஓம் பாமா லட்சுமி போற்றி
54. ஓம் உருக்குமணி லட்சுமி போற்றி
55. ஓம் மகேச லட்சுமி போற்றி
56. ஓம் மீனா லட்சுமி போற்றி
57. ஓம் மித்திர லட்சுமி போற்றி
58. ஓம் திருஞான லட்சுமி போற்றி
59. ஓம் குணஞான லட்சுமி போற்றி
60. ஓம் சௌபாக்கிய லட்சுமி போற்றி
61. ஓம் தேவஞான லட்சுமி போற்றி
62. ஓம் சரோஜா லட்சுமி போற்றி
63. ஓம் பால லட்சுமி போற்றி
64. ஓம் அற்புத லட்சுமி போற்றி
65. ஓம் பாஞ்சால லட்சுமி போற்றி
66. ஓம் ஆனந்த லட்சுமி போற்றி
67. ஓம் நாக லட்சுமி போற்றி
68. ஓம் உதய லட்சுமி போற்றி
69. ஓம் வனிதா லட்சுமி போற்றி
70. ஓம் அச்சுதா லட்சுமி போற்றி
71. ஓம் ஸ்ரீ லட்சுமி போற்றி
72. ஓம் இலட்சண லட்சுமி போற்றி
73. ஓம் இலக்கண லட்சுமி போற்றி
74. ஓம் இல்லக லட்சுமி போற்றி
75. ஓம் உத்தமி லட்சுமி போற்றி
76. ஓம் அட்ட லட்சுமி போற்றி
77. ஓம் சொரூபண லட்சுமி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

78. ஓம் மாணிக்க லட்சுமி போற்றி
79. ஓம் மரக லட்சுமி போற்றி
80. ஓம் பூதேவ லட்சுமி போற்றி
81. ஓம் ஸ்ரீதேவ லட்சுமி போற்றி
82. ஓம் மகர லட்சுமி போற்றி
83. ஓம் வராக லட்சுமி போற்றி
84. ஓம் கூர்ம லட்சுமி போற்றி
85. ஓம் வாம லட்சுமி போற்றி
86. ஓம் நரசிங்க லட்சுமி போற்றி
87. ஓம் மரகத லட்சுமி போற்றி
88. ஓம் கல்கி லட்சுமி போற்றி
89. ஓம் ராதா லட்சுமி போற்றி
90. ஓம் ஜானகி லட்சுமி போற்றி
91. ஓம் தேவகி லட்சுமி போற்றி
92. ஓம் சுதர்சன லட்சுமி போற்றி
93. ஓம் வாசுகி லட்சுமி போற்றி
94. ஓம் சர்வமங்கள லட்சுமி போற்றி
95. ஓம் ஜெயஜெய லட்சுமி போற்றி
96. ஓம் நிறைஞ்சி லட்சுமி போற்றி
97. ஓம் கலா லட்சுமி போற்றி
98. ஓம் அரவிந்த லட்சுமி போற்றி
99. ஓம் சீதாராம லட்சுமி போற்றி
100. ஓம் வைகுந்த லட்சுமி போற்றி
101. ஓம் பூரண லட்சுமி போற்றி
102. ஓம் புட்கலை லட்சுமி போற்றி
103. ஓம் கண்மநிவாரண லட்சுமி போற்றி
104. ஓம் தரித்திரநிவாரண லட்சுமி போற்றி
105. ஓம் தோஷநிவாரண லட்சுமி போற்றி
106. ஓம் பாபநாசக லட்சுமி போற்றி
107. ஓம் நோய்நிவாரண லட்சுமி போற்றி
108. ஓம் இலட்சுமிநாராயணி போற்றி போற்றி

***சர்வத்த கோவிந்த நாம சங்கீர்த்தனம்***
***கோவிந்த கோ கோவிந்தகரே***
***ஜெயஸ்ரீம்***

இளமையும் வசீகரமும் குன்றாதிருப்பதற்கு! இளமையை அடைவதற்கு உங்கள் பெயர் வராவிட்டால் ஒரு நாமத்தை நீக்கி உம் நாமத்தை கூட்டி காலையும் மாலையும் பாராயணம் செய்க பதினாறு பேறுகளும் பொலியும் பெற்று நோய்களும் நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்:

18 – 01 – 1930

மறைவு:

16 – 02 – 2022

எமது சுழிபுரம் கிழக்கு மூத்தோர் சங்க
வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டவரும்
நிதிப்பங்களிப்பு புரிந்தவரும்
உறவினரும் ஆகிய

# அமரர் திரு
# இராமலிங்கம் தம்பையா
# அவர்கள்

இறைபதம் அடைந்தமையையிட்டு மிகுந்த வேதனை அடைவதுடன் அவரது மனைவி,பிள்ளைகள் மற்றும் உற்றார் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம். அவரது ஆன்மா இறைவன் பாதங்களில் சாந்தியடைய பிராத்திக்கின்றோம்.

**"உடம்பு தான் அழிந்தது அவரின் ஆன்மா நித்தியமானது"**

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**சுழிபுரம் கிழக்கு.**
**சோழபுரம் திருத்தொண்டர் பேரவை**
**மூத்தோர் சங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்ணாகம் அண்ணா கலை மன்றத்தின்

# கண்ணீர் காணிக்கை

| தோற்றம்: | | மறைவு: |
|---|---|---|
| 18 – 01 – 1930 |  | 16 – 02 – 2022 |

எமது கிராமத்தின் மூத்த பிரஜையும்
பண்ணாகம் அண்ணா கலை மன்றன்தின் காப்பாளரும்
பொது அமைப்புகளில் மிகுந்த அக்கறை கொண்டு
நிதிப்பங்களிப்பு புரிந்து அதன் வளர்ச்சிக்கு உதவியவருமாகிய

## அமரர் திரு இராமலிங்கம் தம்பையா அவர்கள்

அமரர் திருவாளர் இ. தம்பையா அவர்கள் எமது மன்றத்திற்கு பல வழியில் உதவிகள் ஒத்துழைப்புக்கள் நல்கிய ஒரு பெரியாருமாவார். அன்னார் எமது மன்றத்திற்கு கட்டடம் கட்டவேண்டும் என்று ஒரு தொகை பணத்தை முதலாவதாகத் தந்து ஆரம்பித்து வைத்தார். அவரது முயற்சியால் தான் மன்றக் கட்டிடம் எமதூரில் கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. அது மட்டுமல்லாது கட்டிடத்துக்கான அடிக்கல்லை நாட்டி வைத்து திறப்பு விழாவையும் செய்த பெருமை அவரையே சாரும்.

அமரர் அவர்கள் எமது மன்றத்துடன் பல வழிகளிலும் ஆக்கமும் ஊக்கமும் தந்துதவினார். அது மட்டுமல்லாமல் அவர் எமது ஊரின் பல அமைப்புக்களிலும் முக்கியபதவிகளை வகித்துள்ளார். அதில் குறிப்பாக விசுவத்தனை முரு கன் கோவில் பரிபாலன சபை, பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் போன்றவற்றில் தலைவராக பதவி வகித்தவர்.

அன்னார் எமது ஊரிலுள்ள பலருக்கு பல வகைகளில் உதவிகள் செய்து அவர்களின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை கொண்டவர். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுவதுடன் அன்னாரின் ஆத்ம எல்லாம்வல்ல விசுவத்தனை முருகப்பெருமான் திருப்பாதங்களைச் சென்றடைய வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் பிரிவால் துயருறும்

**பண்ணாகம் அண்ணா கலை மன்றம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின்

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
18-01-1930

மறைவு
16-02-2022

*எமது கிராமத்தின் மூத்த பிரஜையும்*

*சமூக சேவையாளரும்*

*இறை தொண்டனுமாகிய*

## அமரர் திரு இராமலிங்கம் தம்பையா

அவர்கள்

அமரர் திருவாளர் இராமலிங்கம் தம்பையா அவர்கள் எமதூரின் மூத்த பிரஜையாவார். அன்னார் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் முக்கிய பதவிகளான தலைவர், செயலாளர், பொருளாளர் போன்ற நிலைகளிலிருந்து கிராமத்தின் அபிவிருத்திக்காக பல முனைகளிலும் செயற்பட்டுவந்தவர்.

அமரர் அவர்கள் பண்ணாகம் விசுவத்தனை முருகமூர்த்தி கோவில் பரிபாலன சபையிலும் பல முக்கியபதவிகளை வகித்து கோவில் திருப்பணிகளை முன்னின்றும் நடத்தி வைத்தார். அதுமட்டுமல்லாது பண்ணாகம் அண்ணா கலை மன்றத்தினதும் அதன் சிறுவர் பாடசாலையிலும் விருப்பங் கொண்டு பல வழிகளிலும் ஆக்கமும் ஊக்கமும் தந்துதவினார். அன்னார் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கும் கிராமத்திற்கும் தங்க ஆலோசனைகளையும் நிதிப் பங்களிப்பினையும் வழங்கிய ஒரு பெரியார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள் மற்றும் உற்றார், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுவதுடன் அன்னாரின் ஆத்ம எல்லாம்வல்ல விசுவத்தனை முருகப்பெருமான் திருப்பாதங்களைச் சென்றடைய வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் பிரிவால் துயருறும்

**பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது குடும்பத்தினருக்கு கலங்கரை விளக்கெனத்
திகழ்ந்த அமரர். இ. தம்பையா அவர்களுக்கு
எமது ஆத்மார்த்தமான அஞ்சலிகள்!!!



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18 . 01 . 1930 | 16 . 02 . 2022 |

# அமரர். இராமலிங்கம் தம்பையா

எங்கள் பெரியதந்தையின் (அமரா. அமிாதலிங்கம) மைத்துனரும எங்கள் தாததா அமரா வலலிபுரம அவாகள மீது மிகக மரியாதையும அன்பும கொணடவரும நாஙகள அவசரத்துக்கு கேட்கும்போதெல்லாம் பண உதவி செய்தவருமாகிய எங்கள் தமபையா மாமாவின் இழப்பு எங்கள் குடும்பத்தினருக்கு பேரிழப்பாகும். என்றும் எம்மால் மறக்க முடியாதவரின் பிரிவால் துயருறறிருக்கும் அனனாரின் குடும்பத்தவாக்கு எமது ஆழநத அனுதாபஙகள அமரரின் ஆதம சாநதிககு எலலாமவலல வழககமபரை ஸ்ரீ முத்துமாரியமபாளையும பணணாகம விசுவத்தனை முருகபபெருமானையும பிராாத்திக்கிறோம.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அமரர். வல்லிபுரம் குடும்பத்தினர் சார்பாகவும்
அமரர். அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளை சார்பிலும்
தங்க. முகுந்தன் குடும்பம்.

மூளாய்
17.02.2022

EESHWARA NETCAFE CHULIPURAM



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
18.01.1930

உதிர்வு
16.02.2022



அமரர்

# இராமலிங்கம் தம்பையா

எமது கிராமத்தின் பெரியார்களில் மிகவும் ஒழுக்கமானவரும், வயதில் முதிர்ந்தவருமாகிய இராமலிங்கம் தம்பையா எங்கள் கோவில், விசவத்தனை முருகன் பரிபாலன சபையில் தலைவர், பொருளாளர் போன்ற பல முக்கிய பதவிகள் வகித்தவர், மேலும் பல சபைகளிலும் சேவை புரிந்தவர், எங்கள் பண்ணாகம் உதவும் கரங்களுக்கு பல ஆயிரம் ரூபாக்களை தந்ததுடன் அதை ஆரம்பிப்பதற்கு உறுதுணையாக இருந்தவர்.

அவர் 16.02.2022 ஆம் திகதி சிவபதம் அடைந்ததையிட்டு அவருக்கு பண்ணாகம் உதவும் கரங்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்தி அவர் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல முருகப்பெருமானை வேண்டுவதுடன் அவர்களை இழந்த குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

பண்ணாகம் உதவும் கரங்கள்
நிர்வாகத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 18.01.1930

உதிர்வு 16.02.2022



அமரர்

# இராமலிங்கம் தம்பையா

எங்கள் .குடும்ப தலைமகனாக விளங்கிய என் அன்பு அத்தானின் ஆன்மா இறைவனடி சேர்ந்த செய்தியினைக் கேட்டு ஆற்றொணாத் துயரமடைகின்றோம். ஊரும் உறவுகளும் போற்றும் ஒழுக்கசீலராகவும் தமிழினதேசியப்பற்றாளராகவும். கிராம வளர்ச்சியில் அக்கறை கொண்டவராகவும் ஆலய நிர்வாக தொண்டராகவும் பொதுச்சபைகளில்பணிகள் பலசெய்து பெருமையுடன் வாழ்ந்தீர்கள் உன்னதமான மனைவி மக்களை பெற்று சீர்சிறப்புடன் வாழ்ந்த திருமகனார் எங்கள் அத்தான்.மனிதருள் மாணிக்மே எங்கே போய்விட்டீர்கள். என் திருமணவாழ்விற்கு அத்திவாரம் ஆரம்பித்து முன்னின்று நடத்திய முதல்வனே .கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனதுவோ .எம்முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும் மண்ணுலகம் விட்டு நீங்கள் விண்ணுலகம் சென்றாலும் உங்கள் புகழ் என்றென்றும், ஊர் சொல்லும். சதா அபிஷேகம் கண்ட தலைமகனே.ஜென்மம் நிறைந்தது நீங்கள் வாழ்க.மங்கிய சுவாசங்கள் காற்றுடன் சேர்க பூதங்கள் ஐந்திலும் பொன்னுடல் கலக்க.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி.

துயர் பகிர்வோர்

மைத்துனர்கள் உமாதேவி கெங்காதேவி குடும்பம்

ராசா. துரை பண்டம் குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
18.01.1930

மறைவு
16.02.2022



அமரர்

# இராமலிங்கம் தம்பையா

அமரர் அவர்கள் எங்கள் பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவில் பரிபாலன சபையின் (முன்னாள்) தலைவராக நீண்ட காலம் இருந்து சபையின் இன்றைய வளர்ச்சிக்கும் அதன் உயர்ச்சிக்கும் பெரும் பங்கு ஆற்றினார். கோவிலில் பல திருப்பணிகளை சபையின் தலைவராக முன்னின்று திறம்பட செயற்படுத்திய செயல் வீரர்.

இவர் அமரர்களான பண்டிதர் அ.ஆறுமுகம், ஆயுர்வேத வைத்தியர் செ.வைத்திலிங்கம், க.வாமதேவன், பண்டிதர் ப.இராசகுரு, சோ.க.வேலாயுதர், க.திருச்செல்வம், ஆகியோருடன் இணைந்து கோவில் பரிபாலன சபை நிர்வாகத்தினை திறம்பட நடத்தினார். அது மட்டுமல்லாது எமது கிராமத்தில் உள்ள சங்கங்கள் பலவற்றிலும் அங்கம் வகித்து செயலாற்றினார். சைவத்தையும் தமிழையும் தமது இருகண்களாகப் போற்றியவர்.

அகவை 90 இனை கடந்த பரிபாலன சபையின் மூத்த உறுப்பினரான அவரின் மறைவு எங்கள் பரிபாலன சபைக்கு மட்டுமல்ல பண்ணாகம் கிராமத்திற்கே பேரிழப்பாகும். அமரரின் இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய விசவத்தனை பதியுறையும் முருகப்பெருமானை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அமரரின் பிரிவால் துயருறும்
பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவில்
பரிபாலன சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**

**செய்நன்றி கொன்ற மகர்கு"**

என்ற வள்ளுவர் வாக்கிற்கு அமைய எங்கள் குலவிளக்கு அணைந்த செய்தி கேட்டு ஓடோடி வந்து ஆறுதல் கூறி அனுதாபந் தெரிவித்தோருக்கும், அஞ்சலி பிரசுரம் வெளியிட்டோருக்கும், மற்றும் தொலைபேசி, தபால், தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் இறுதிக்கிரியைகள் இறுதி ஊர்வலம் ஆகியவற்றில் பங்கு பற்றியோருக்கும் இம்மலரை அழகுற அச்சிட்டுத்தந்த சங்கானை திருமொழி அச்சகத்தினருக்கும் மற்றும் பல வழிகளிலும் எமக்கு தோளோடு தோள் கொடுத்து உதவிகள் பல செய்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.




"நேசவாசா"
பண்ணாகம்,
சுழிபுரம்.

இங்கனம்
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு இ. தம்பையா அவ

கதிர்காமர் + முத்துப்பிள்ளை (தந்தைவழி)

- ஆறுமுகம் + பொன்னம்மா
- மாரிமுத்து
- இளையதம்பி
- செல்லர்
- பொற்கொடி

ஆறுமுகம் + பொன்னம்மா:

- ஆசையம்மா + சின்னத்தம்பி
  - பரமேஸ்வரி
  - மகேஸ்வரி
  - செல்வநாயகம்
  - தவமணி
  - திருச்செல்வம்
- **இராமலிங்கம்** +
- வள்ளியம்மை + அப்பாப்பிள்ளை
  - அமிர்தலிங்கம்
  - சொக்கலிங்கம்
  - வாசுதேவலிங்கம்
  - திகம்பரலிங்கம்
- செல்லம்மா + செல்லையா
  - பொன்னம்பலம்
- அன்னப்பிள்ளை + சிவகுரு
  - விநாயகமூர்த்தி
  - பூமலட்சுமி

- தம்பையா + தையல்முத்து
  - அப்புத்துரை
- செ…
  சுப…
  - வள்…
  - அ…
  - பொ…
  - சி…
  - ந…
  - இளை…

இராமலிங்கம் + …:

- **தம்பையா** +
- நல்லம்மா + செல்லப்பா
  - விஜயசெல்வி
  - திலகவதி
  - திலககாந்தன்
  - நகுலேஸ்வரன்
- அன்னம்மா + சோமசுந்தரம்
  - குகனேஸ்வரி
  - சுபாஸ்கரன்
  - சிவனேஸ்வரி
  - ஜெகதீஸ்வரி
  - மோகனதாஸ்
  - ஜெயசுதா
- நேசம்மா
- இராசையா + சரோஜினிதேவி
  - சிவராம்
  - ஜெயராம்
  - அனுராம்

தம்பையா + …:

- முரளீதரன் + வைதேகி
  - இபானன்
  - தீஷிதன்
  - ஈஷாயினி
- இரகுராம் + ஜனனி
  - அக்சயா
- தங்கசொரூபி + கண்ணதாசன்
  - கார்த்திகன்
  - ஆதிரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர்களின் வம்ச விருட்ஷம்

**முருகேசு + சின்னாச்சி (தாய்வழி)**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| செல்லம் | இலட்சுமி | மாரிமுத்து | ஆசைப்பிள்ளை | அப்பாத்துரை | விநாசித்தம்பி | **சின்னத்தங்கம்** |
| + | + | + | + | | | + |
| சுப்பையா | வேலுப்பிள்ளை | இலட்சுமி | தெய்வானை | | | |
| வள்ளியம்மை<br>அன்னம்மா<br>பொன்னம்மா<br>சின்னம்மா<br>நாகம்மா<br>இளையபிள்ளை | சிவசுப்பிரமணியம் | | பூலோகதேவி<br>இராசதுரை<br>தங்கச்சியம்மா<br>திலகவதி<br>ஐயாத்துரை<br>சிவராசா<br>ரஞ்சிதமலர்<br>திரவியம் | | | |

**கணபதிப்பிள்ளை சண்முகலிங்கம் + இளையதம்பி பொன்னம்மா (மனைவி வழி)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **சரோஜினிதேவி** | உமாதேவி | கெங்காதேவி | சிவராசா | புண்ணியமூர்த்தி | கணபதிப்பிள்ளை |
| + | + | + | + | + | + |
| | இரத்தினசிங்கம் | பாலசிங்கம் | லோகரட்சணி | மீனலோஜினி | சந்திரலோஜினி |
| | குருபரன்<br>ஜெயசீலன்<br>மயூரதன்<br>பகீரதன்<br>பரணீதரன் | கோமதி<br>சுமதி<br>சுகிதரன்<br>சுகிமதி<br>அரிகரன் | அகிலன் | பொன்விழி<br>சாயிமோகன்<br>சாயிதாசன்<br>சாயிகாந்தன்<br>சாயிபாலா | உருத்திரன்<br>சுமணன்<br>கனோஜன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமான வாழ்விற்கு

தூய்மையாக இருப்பதும்
மற்றவர்களுக்கு நன்மை
செய்து தான் எல்லா
வழிபாடுகளினதும் சாரமாகும்
தீமை செய்பவன் தனக்கும்
மற்றவர்களுக்கும் தீமை செய்கிறான்
நன்மை செய்பவன் தனக்கும்
பிறர்க்கும் நன்மையே செய்கிறான்
உடலும் உள்ளமும் தூய்மையின்றி
கோவிலுக்கு போவதும் இறைவனை
வழிபடுவதும் பயனற்றதாகும்
நேர்மையுடனும் தைரியமாகவும்
பக்தி சிரத்தையுடனும் வாழ்ந்தால்
இறைவனை அடைவது உறுதி.



சுவாமி விவேகானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org